www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# மதுரை மாவட்டம்-
## 11-ம் வகுப்பு மாணவர்களுக்கான பொருளியல் பாட சிறப்பு வழிகாட்டி கையேடு

தலைமை

**திருமதி.அ.ரேணுகா**

முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை

மேற்பார்வை

**திருமதி.T.நான்சி**
தலைமையாசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மதுரை

**திரு.க.செல்வக்குமார்**
தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, எம்.சுப்புலாபுரம்

ஆசிரியர்கள் குழு

**திரு.க.கர்ணன் - முதுகலை ஆசிரியர்**
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கொட்டாம்பட்டி

**திரு.R.பாலமுருகன்**
**முதுகலை ஆசிரியர்.,**
V.H.N.மேல்நிலைப் பள்ளி, மதுரை

**திருமதி.கோ.ரா.காயத்ரி**
**முதுகலை ஆசிரியர்.,**
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மேலூர்

**திருமதி.நா.ஹேமபிரபா**
**முதுகலை ஆசிரியர்.**
TVS மேல்நிலைப் பள்ளி, மதுரை

**திருமதி. ந.ராதா**
**முதுகலை ஆசிரியர்**
அரசு ஆதி.ந.மேல்நிலைப் பள்ளி, அச்சம்பட்டி

**திருமதி. ச.லிங்கம்**
**முதுகலை ஆசிரியர்**
அரசு மேல்நிலைப் பள்ளி, சமயநல்லூர்

**திரு.ஜோ.சாம்சன் வில்லியம்**
**முதுகலை ஆசிரியர்**
தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி, மதுரை

**திருமதி.K.M.கனகாம்பிகை**
**முதுகலை ஆசிரியர்**
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மதுரை

**திருமதி.D.மைதீன் பானு, முதுகலை ஆசிரியர்**
அரசு மேல்நிலைப் பள்ளி, T.அய்யங்கோட்டை






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## Analysis of Minimum Learning Material with previous years Public Examinations

| QUESTIONS | Number of questions to be written | Marks | 2019 March | 2020 march | 2020 July | 2022 May | 2022 Aug | 2023 Mar | 2023 July | 2024 Mar | 2024 July | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| One word | 20/20 | 20 | 16 | 15 | 15 | 15 | 16 | 15 | 17 | 13 | 17 | |
| Two Marks | 7/10 | 14 | 10 | 14 | 12 | 14 | 14 | 14 | 14 | 14 | 14 | |
| Three Marks | 7/10 | 21 | 21 | 18 | 18 | 18 | 21 | 21 | 18 | 21 | 21 | |
| Five Marks | 7 (Either or Questions) 7/14 | 35 | 25 | 35 | 30 | 35 | 30 | 25 | 25 | 30 | 30 | |
| Total | | 90 | **72** | **82** | **75** | **72** | **81** | **75** | **74** | **78** | **82** | |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அத்தியாயம் - 1
## நுண்ணினப் பொருளியல் ஓர்-அறிமுகம்

1) **னிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப்பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர்.**
அ) ஆடம் ஸ்மித் ஆ) இலயனல் ராபின்ஸ்
இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) சாமுவேல்சன்

2) **பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை**
அ) எண்ணற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள்
இ) பற்றாக்குறை ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

3) **நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?**
அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம்
ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்
ஈ) ஒட்டுமொத்தப் பொருளாதாரத் தொடர்பு

4) **கீழ்க்கண்டவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது?**
அ) கடந்த ஆண்டு உண்மை உள்நாட்டு உற்பத்தி 25% அதிகரித்துள்ளது.
ஆ) கடந்த ஆண்டு 9.8% உழைக்கும் சக்தி வேலையின்மை நிலைப் பெற்றுள்ளது.
இ) கோதுமையின் விலை அதன் தேவையை நிர்ணயிக்கிறது.
ஈ) கடந்த ஆண்டு பொது விலை 4% அதிகரித்துள்ளது

5) **பொருந்தா ஒன்றைக் கண்டறிக.**
அ) "நாடுகளின் செல்வங்கள் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை"
ஆ) "பொருளாதாரக் கோட்பாடுகள்"
இ) "பொருளாதார அறிவியலின் இயல்பும் அதன் சிறப்பும்"
ஈ) "மற்றவை மாறாதிருக்கும்போது"

6) **சமநிலை விலை என்பது அந்தவிலையில்**
அ) எல்லாம் விற்கப்படுகிறது
ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்
ஈ) மிகைத் தேவை பூஜ்ஜியம்

7) **நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களைக் குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர்**
அ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஆ) ஆடம் ஸ்மித்
இ) இலயனல் ராபின்ஸ் ஈ) பால் சாமுவேல்சன்

8) **விருப்பங்கலோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றி பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும் என்று இலக்கணம் வகுத்தவர்.**
அ) இலயனல் ராபின்ஸ் ஆ) ஆடம் ஸ்மித்
இ) ஆல்ஃபிரட் மார்ஷல் ஈ) பால் சாமுவேல்சன்

9) **பொருளாதாரத்தின் தந்தை யார்?**
அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம் ஸ்மித்
இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால் சாமுவெல்சன்

10) **பொருளியல் என்பது ஒரு சமூக அறிவியல் என்று கூறுவர். ஏனெனில்**
அ) காரணம் மற்றும் விளைவுகளுக்கிடையே உள்ள தொடர்பு
ஆ) விதிகளை உருவாக்குவதற்கு தொகுத்தாய்வு முறையும், பகுத்தாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.
இ) பரிசோதனைகள்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

11) **பயன்பாடு என்பது**
அ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
இ) பண்டங்களின் மொத்த மதிப்பு
ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

12) **அங்காடி என்பது**
அ)பொருட்கள் வாங்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
ஆ)பொருட்கள் விற்கும் இடத்தை மட்டும் குறிக்கும்
இ)விலைகள் சரி செய்யும் இடத்தை மட்டும் குறிக்கும்
ஈ)நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும், விற்கும் முறையைக் குறிக்கும்

13) **எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல?**
அ) சாதாரண மனிதனைப் பற்றிப் படிப்பது
ஆ) பொருளாதாரம் செல்வம் மீது மட்டும் தனி கவனம் செலுத்துவதில்லை
இ) பொருளாதாரம் என்பது பருப்பொருள் நலம் சார்ந்த படிப்பு
ஈ) பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும், வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.

14) **வளர்ச்சி இலக்கணம் என்பது**
அ) இயங்கு நிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை
ஆ) எண்ணற்ற வளங்கள் மற்றும் விருப்பங்களுக்கான பிரச்சனையாகும்.
இ) செல்வத்தை உற்பத்தி செய்வது மற்றும் பகிர்வது
ஈ) மனிதர்களின் பருப்பொருள் சார்ந்த நலன்

15) **பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது?**
அ) விலைக் கோட்பாடு
ஆ) வருமானக் கோட்பாடு
இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு
ஈ) வணிகக் கோட்பாடு

16) **________பரிமாற்ற மதிப்பைக் கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும், பரிமாற்றவும் முடியும்**
அ) பண்டங்கள் ஆ) சேவைகள்
இ) அங்காடிகள் ஈ) வருவாய்

17) **பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க**
**அ) இது பயனுக்கும் சமமானது**
ஆ) இது நீதிநெறி முக்கியத்துவம் கொண்டது
இ) இது மகிழ்வுக்கு சமமானது
ஈ) இது நுகர்வோரின் மனநிலையைச் சார்ந்தது

18) **பற்றாக்குறைப் பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார்?**
அ) ஆடம்ஸ்மித் ஆ) மார்ஷல்
இ) ராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்

19) **தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை**
அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை
இ) இயல்புரை அறிவியல் ஈ) நெறியுரை அறிவியல்

20) **விற்பனைசெய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும்?**
அ) விலை ஆ) மொத்தச் செலவு
இ) இறுதி சமநிலை வருவாய்
ஈ) இறுதி சமநிலைச் செலவு

**விடைகள்:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| இ | இ | இ | இ | ஈ | இ | ஆ | அ | ஆ | ஈ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| ஆ | ஈ | ஈ | அ | அ | அ | ஈ | இ | ஆ | அ |



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**21.பொருளியல் என்றால் என்ன?**

பொருளியல் என்றால் "இல்லங்களின் நிர்வாகம்" என்று பொருள்படும்.

**22.நுண் பொருளியல் என்றால் என்ன?**

துனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை பற்றியது நுண் பொருளியல் ஆகும்.

**23.பண்டங்கள் என்றால் என்ன?**

மனித விருப்பங்களை பூர்த்தி செய்யும் பொருட்கள் மற்றும் பணிகள் பண்டங்கள் எனப்படும்.

**24.பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.**

| பண்டங்கள் | பணிகள் |
|---|---|
| 1.தொட்டு உணரக்கூடியவை | புலனாகாப் பொருட்கள் |
| 2.உருவ வடிவமுளையவை | உருவ அடையாளம் இல்லை |

**25.பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகைளைக் கூறுக.**

1.வடிவப் பயன்பாடு – பருத்தி – துணி

2.காலப் பயன்பாடு – தண்ணீர் - வேளாண்மை

**26.இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க.**

உள்ளதை உள்ளவாறு கூறும் அறிவயல்.

**27.பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.**

பகுத்தாய்வு முறை என்பது பொதுக்கருத்திலிருந்து ஒரு தனிக் கருத்தை அடைவதாகும்.

**பகுதி-இ- 3 மதிப்பெண் வினாக்கள்**

**28)பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.**

"*விருப்பங்களோடும், கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியல்*" -இலயனஸ் ராபின்ஸ்

**குறைபாடுகள்:**

1. நலன் தரக்கூடிய, நலன் தராத என்று தரம் பிரிக்கவில்லை.
2. பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்து விளக்கவில்லை

**29) என்ன உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்கான முக்கிய முடிகள் யாவை?**

**முக்கிய முடிவுகள்:**

1. உணவு பொருட்களா அல்லது ஆடம்பரப் பண்டங்களை உற்பத்தி செய்வதா?
2. விவசாயப் பொருட்களா அல்லது *தொழிற்சாலைப்* பொருட்களை உற்பத்தி செய்வதா?
3. நுகர்வு பண்டங்களை அல்லது மூலதனப் பண்டத்தை வைத்துக் கொள்வதா?
4. வளங்களை கல்வி, சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா? ராணுவப் பணிகளுக்குப் பயன்படுத்துவதா? என்பதாகும்.

**30)பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.**

1. **நுகர்வு** :. மனித விருப்பங்களை நிறைவு செய்யக்கூடியது.
2. **உற்பத்தி**: உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றுவது.
3. **பரிமாற்றம்:** நுகர்வையும், உற்பத்தியையும் இணைப்பதாகும்.
4. **பகிர்வு:** உற்பத்திக் காரணிகளின் வருவாய் பகிர்வைக் குறிக்கும்.

**31)பணிகளின் பல்வேறு இயல்புகளை விவரி?**

**1.புலனாகாப் பொருட்கள்:**

உருவ அடையாளம் இல்லை .எ.கா.குறியீடு,நிறுவன நன்மதிப்பு.

**2..பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது.** எ.கா.உழைப்பை, உழைப்பாளர்களிடமிருந்து பிரிக்க இயலாது.

**3.அழியக்கூடியவை:**

பணிகளை சேமித்து வைக்க இயலாது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**32)பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?**

1.பயன்பாடு ஒரு உளவியல் கருந்தாகும.
2.பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல.
3.பயன்பாடும், மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல.
4.பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்.
5.மனித விருப்பத்தின் தீவிரத்தை சார்ந்தது.
6.நீதி நெறி, ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல.

33)நுண்**ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?**

| நுண்ணியல் பொருளியல | பேரியல் பொருளியல் |
|---|---|
| 1.தனிப்பட்டவற்றை ஆராய்கிறது. | முழுத்தொகுதியையும் ஆராய்கிறது. |
| 2.சிறு பகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. | முழு பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. |
| 3.தனிப்பண்டம், காரணிகளின் விலைத் தீர்மானம் பற்றியது. | பொது விலையோடு தொடர்புடையது. |

**34)இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியலை ஒப்பிடுக**

**இயல்புரைப் பொருளியல்:**

இயல்புரைப அறிவியல், உள்ளதை உள்ளவாறு கூறுகிறது. எ.கா. பண அளிப்பு உயர்வானது விலை ஏற்றத்தை ஏற்படுத்துகிறது.

**நெறியுரைப் பொருளியல்:**

நெறியுரை அறிவியல், எதுவாக இருக்க வேண்டும் என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது. எ.கா. பொருளாதாரத்தில் பணவாட்டத்தை விட பணவீக்கமே மேலானது.

**பகுதி-ஈ 5 மதிப்பெண் வினாக்கள்**

35)**பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.**

| தலைப்பு | செல்வ இலக்கணம்: | நல இலக்கணம்: |
|---|---|---|
| ஆசிரியர் | ஆடம் ஸ்மித் | ஆல்பிரட் மார்ஷல் |
| இலக்கணம் | "பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்" | பொருளியல் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும் மற்றொரு புறம் மனிதனின் நலத்தைப் பற்றியும் ஆராய்கிறது |
| திறனாய்வு | .செல்வத்திற்கு முக்கியத்துவம், மனித நல புறக்கணிக்கப்பட்டுள்ளது. | பொருள் சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. |

| தலைப்பு | பற்றாக்குறை இலக்கணம்: | வளர்ச்சி இலக்கணம்: |
|---|---|---|
| ஆசிரியர் | இலயனஸ் ராபின்ஸ், | சாமுவேல்சன் |
| இலக்கணம் | "பொருளியல் என்பது விருப்பங்களோடும் பற்றாக்குறையான சாதனங்களோடு தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்கிறது | , "பொருளியல் என்பது மனிதன் பணத்தை பயன்படுத்தியோ(அ) பயன்படுத்தாமலே பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு உற்பத்தி மற்றும் நுகர்விற்கு எவ்வாறு பங்கிடுகிறான் என்பதைப் பற்றியதாகும்" |
| திறனாய்வு | நலன் தரக்கூடிய, நலன் தரா பொருட்கள் என பிரிக்கவில்லை. | பணம் மற்றும் பண்டமாற்று பொருளாதாத்திற்கும் பொருந்தக்கூடயது. |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**36)பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக.**




**37)பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி?**

**1.பொருளியலின் தன்மைகள்:**

பொருளியலின தன்மையினை குறிப்பிட்ட சில பொருளியல் அறிஞர்களின் பல்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

**அறிஞர்களின் இலக்கணம்:**

1)ஆடம் ஸ்மித் - செல்வ இலக்கணம்
2)ஆல்பிரட் மார்ஷல் - நல இலக்கணம்
3)இலயனஸ் ராபின்ஸ் - "பற்றாக்குறை இலக்கணம்"
4)சாமுவேல்சன் - வளர்ச்சி இலக்கணம்

**2.பொருளியலின் எல்லை:**


1)பொருளியலின் எல்லை என்பது பொருளியலின் பாடப் பொருளாகும்.
2)பொருளியல் ஒரு கலையா அல்லது ஓர் அறிவியலா?
3)இயல்புரையியலா, அல்லது நெறியுரையியலா?
4)பண்டங்கள் மற்றும் பணிகள், நுகர்வு, உற்பதி ,பகிர்வு, பரிமாற்றம் ஆகியவைகளை ஆராய்கிறது.

**38)உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி?**

ஏதேனும் இரு பொருட்களை எடுத்துக் கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினாவே உற்பத்தி வாய்ப்பு வளைகோடாகும்.

**வரைபடம்:**

| உற்பத்தி வாய்ப்புகள் | புத்தகம் | உணவு |
|---|---|---|
| P1 | 100 | 0 |
| P2 | 50 | 50 |
| P3 | 100 | 0 |




- *வெவ்வெறு உற்பத்தி வாய்ப்புகள் P1,P2,P3– என காட்டப்பட்டுள்ளது.P4-என்பது உபரி வளங்கள் இருப்பதாலும், P5-என்ற அளவுக்கு வளங்கள் இல்லாததாலும் தேர்வு செய்ய மாட்டார்.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அத்தியாயம்-2
## நுகர்வுப் பகுப்பாய்வு

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

1. **முரண்பட்டதை தெரிவு செய்க.**
அ) ஆடம்பர பண்டங்கள்
ஆ) வசதிபண்டங்கள்
இ) அத்தியாவசிய பண்டங்கள்
ஈ) விவசாயப் பொருட்கள்

2. **தெரிவுகள் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்டவையாக இருப்பதற்கு காரணம் வளங்கள் ________ இருப்பதால்.**
அ) பற்றாக்குறை
ஆ) அளிப்பு
இ) தேவை
ஈ) அபரிமிதமான

3. **இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர்**
அ) ஜே.ஆர்.ஹிக்ஸ்
ஆ) ஆர்.ஜி.டி.ஆலன்
இ) மார்ஷல்
ஈ) ஸ்டிக்லர்

4. **கீழ்க்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் இறுதிநிலை பயன்பாட்டை அளவிடலாம்**
அ) TUn-TUn-1
ஆ) TUn-TUn+1
இ) TUn+TUn-1
ஈ) TUn-TUn+1

5. **இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு .....**
அ) குறைவாக
ஆ) உச்சமாக
இ) பூஜ்ஜியமாக
ஈ) எதிர்மறையாக

6. **காஸன் முதல் விதி_____என்றும் அழைக்கப்படுகிறது.**
அ) சமஇறுதி நிலை பயன்பாட்டு விதி
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி
இ) தேவைவிதி
ஈ) குறைந்து செல் விளைவு விதி

7. **கீழ்க்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாகக் கொண்டுள்ளது.**
அ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி
ஆ) அளிப்பு விதி
இ) சமஇறுதி நிலை பயன்பாட்டு விதி
ஈ) காஸன் விதி

8. **நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்**
அ) ஆடம்ஸ்மித்
ஆ) மார்ஷல்
இ) ராபின்ஸ்
ஈ) ரிக்கார்டோ

9. **தகுிலை ரூ.250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ.200 ஆகவும் உள்ளது, நுகர்வோர் எச்சத்தைக் காண்க.**
அ) 375
ஆ) 175
இ) 200
ஈ) 50

10. **சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது ...**
அ) தரவரிசை ஆய்வு
ஆ) இயல்பெண் ஆய்வு
இ) பண்பளவை ஆய்வு
ஈ) உளவியல் ஆய்வு

11. **தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்**
அ) பெர்கூசன்
ஆ) கீன்ஸ்
இ) ஆடம்ஸ்மித்
ஈ) மார்ஷல்

12. **கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும்?**
அ) வரி அதிகரிப்பதால்
ஆ) அதிக மானியம் வழங்குவதால்
இ) வட்டி வீதம் அதிகரிப்பதால்
ஈ) விலை அதிகரிப்பதால்

13. **கொடுக்கப்பட்ட தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகிறது.**
அ) தேவை விரிவு மற்றும் சுருக்கம்
ஆ) தேவை இடப்பெயர்வு
இ) தேவை கூடுதல் மற்றும் குறைதல்
ஈ) மேற்காண் அனைத்தும்

14. **மிகைத்தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக் கோட்டின் வடிவமானது**
அ) படுகிடை
ஆ) செங்குத்து
இ) விரைந்து சரியும்
ஈ) மெதுவாக சரியும்

15. **நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடானது ______இருக்கும்**
அ) குறைவாக
ஆ) அதிகபட்சமாக
இ) சமமாக
ஈ) கூடுதலாக

16. **சம நோக்கு வளைகோட்டை முதன் முதலில் தோற்றுவித்தவர்**
அ) ஹிக்ஸ்
ஆ) ஆலன்
இ) கீன்ஸ்
ஈ) எட்ஜ்வொர்த்

17. **தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக இருக்கும்போது**
அ) அலகுத் தேவை நெகிழ்ச்சி
ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியின்மை
இ) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை
ஈ) மிகைத் தேவை

18. சமஅளவு திருப்தியை கொடுக்கக்கூடிய புள்ளிகளை இணைக்கும் கோடானது இதனுடன் தொடர்புடையவை.
அ) சம நோக்கு வளை கோடுகள்
ஆ) இயல்பெண் ஆய்வு
இ) தேவை விதி
ஈ) அளிப்பு விதி

19. **சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?**
அ) தரப்படுத்துதல்
ஆ) எண்ணிக்கைப்படுத்துதல்
இ) வார்த்தைப்படுத்துதல்
ஈ) எதுவுமில்லை

20. **சம நோக்கு வளைகோடுகள்**
அ) செங்குத்துக் கோடுகள்
ஆ) படுக்கைக் கோடுகள்
இ) நேர்மறைச் சரிவுடையது
ஈ) எதிர்மறைச் சரிவுடையது.

**விடைகள்:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| ஈ | அ | இ | அ | ஆ | ஆ | அ | ஆ | ஈ | அ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| ஈ | ஆ | அ | ஈ | இ | ஈ | அ | அ | அ | ஈ |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி-ஆ- 2 மதிப்பெண் வினாக்கள்

**21)பயன்பாட்டை வரையறு**

பண்டங்கள் மற்றும் பணிகளை நுகரும்போது நுகர்வோருக்கு கிடைக்கும் மனநிறைவு.

**22)விருப்பங்களை வகைப்படுத்து**

1.இன்றியமையாத விருப்பம்
2.வசதிக்கான விருப்பம்
3.ஆடம்பர விருப்பம்

**23)நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.**

1.எண்ணளவை பயன்பாட்டு ஆய்வு
2.தரவரிசை ஆய்வு(அ)தரவரிசை பயன்பாட்டு முறை

**24)விலைத் தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி**

| | | | | |
|---|---|---|---|---|
| EP=α | EP=0 | EP>1 | EP<1 | EP=1 |

**25) சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன?**

ஒரு வளைகோட்டில் உள்ள இரு பண்டங்களின் அனைத்து கலவையும் நுகர்வோருக்கு சம அளவு திருத்தியை தருமாயின் அது சமநோக்கு வளைகோடு எனப்படும்.

**26) நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.**

நுகர்வோர் எச்சம்= கொடுக்க நினைத்த விலை– உண்மையில் கொடுத்தவிலை

(அ)

நுகர்வோர் எச்சம்=தகுவிலை-உண்மை விலை

**27) கி∴பன் பொருள்கள் எவை? ஆவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?**
**கி∴பன் பொருள்கள்:**

1.கம்பு, கேழ்வரகு, சோளம்.
தாழ்ந்த தரப் பண்டங்களின் விலை குறையும்போது குறைவாக வாங்குவர்.

## பகுதி-இ- 3 மதிப்பெண் வினாக்கள்

**28)மனித விருப்பங்களின் இயல்பைக் கூ;றுக.**

1.விருப்பங்கள் எண்ணற்றவை
2.விருப்பங்கள் பழக்கவழக்கங்களாக மாறும்
3.விருப்பங்கள் நிறைவேறக்கூடியவை
4.மாற்றுப் பொருளால் நிறைவுபெறுபவை
5.விருப்பங்கள் போட்டியிடுபவை
6.விருப்பங்கள் ஒன்றைஒன்று சார்ந்துள்ளன.
7.மீளத்தோன்றுபவை.

**29)மொத்தப் பயன்பாட்டிற்கும், இறுதிநிலைப் பயன்பாட்டிற்கும் உள்ள உறவை விளக்குக.**

| மொத்தப் பயன்பாடு | இறுதி நிலைப் பயன்பாடு |
|---|---|
| 1. அதிகரித்தல் | 1 குறையும் |
| 2. உச்சத்தில் இருக்கும்போது | 2 பூஜ்ஜியமாகிறது |
| 3. குறையத் தொடங்கும்போது | 3. எதிர்மறையாகிறது |




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**30)நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்குக.**




நுகர்வோர் கொடுக்க நினைத்த விலைக்கும், உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம் எனப்படும்.


நுகர்வோர் எச்சம்=தகுவிலை - உண்மைவிலை

**31) நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.**

ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட வாங்குவதே மேல் என முடிவு செய்து, கொடுக்க நினைத்த விலைக்கும், நுகர்வோர் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோர் எச்சம் எனப்படும்.

**32) தேவை விரிவு மற்றும் தேவை சுருக்கத்தை வேறுபடுத்துக.**

1.குறைந்த விலையில் அதிக பொருட்களை வாங்குவது தேவை விரிவு.
2.அதிக விலையில் குறைந்த பொருட்களை வாங்குவது தேவை சுருக்கம்.





**33)சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?**

1.சமநோக்கு வளைகோடு கீழ்நோக்கிய சரிவை கொண்டவை.
2.தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
3.ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.
4.Xஅச்சையோ, Yஅச்சையோ தொடாது.

**34) நுகர்வோர் சமநிலை என்ற கருத்தை சுருக்கமாக விவரி.**

சமநோக்கு வளைகோட்டின் அடிமட்டத்தில் வரவு செலவுக் கோடு தொடும் புள்ளியில் நுகர்வோர் சமநிலை அடைகிறார்



E என்ற புள்ளி நுகர்வோர் சமநிலைப்புள்ளி.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


### பகுதி-ஈ 5 மதிப்பெண் வினாக்கள்

**35)தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.**

' மற்றவை மாறாமல் இருக்கும் போது ஒரு பொருளுக்கான விலை குறையும் போது மக்கள் அதிகமாகவும், விலை ஏறும் போது குறைவாகவும் வாங்குவர்"-சாமுவேல்சன்

**தேவை அட்டவணை**

| விலை | தேவை |
|---|---|
| 3 | 1 |
| 2 | 2 |
| 1 | 3 |




மேற்காணும் வரைபடத்தில் தேவைக் கோடு கீழ்நோக்கி செல்கிறது. இது விலைக்கும் தேவைக்கும் இடையேயான எதிர்மறைத் தொடர்பை விளக்குகிறது.

**தேவை விதியின் விதிவிலக்குகள்**

**கி.ஃபன் முரண்பாடு:**

தாழ்ரக பண்டங்களின் விலை குறையும் போது ஏழைகள் குறைவாகவும், விலை உயரும்போது அதிகமாகவும் வாங்குவர். எ.கா. சோளம், கேழ்வரகு.

**வெப்ளன் விளைவு**

செல்வந்தர்கள் தாங்கள் வாங்கும் ஆடம்பரப் பண்டங்களின் (தங்கம்,வைரம்) விலை அதிகரித்தால் அதிகம் வாங்குவர், விலை குறைந்தால் குறைவாக வாங்குவர்.

**அறியாமை:**

அதிக விலையுள்ள பண்டமே சிறந்த பண்டமென கருதி அதிகம் வாங்குவர்.

**36)குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.**

ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது. --மார்ஷல்


**எடுகோள்கள்:**

1.பயன்பாடு எண்ணளவையில் அளவிட வேண்டும்.

2.கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகர வேண்டும்.

**அட்டவணை:**

| ஆப்பிள் அலகுகள் | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு |
|---|---|---|
| 1 | 20 | 20 |
| 2 | 30 | 10 |
| 3 | 30 | 0 |
| 4 | 25 | -5 |




**வரைபட விளக்கம்:**

| மொத்தப் பயன்பாடு | இறுதி நிலைப் பயன்பாடு |
|---|---|
| 1. அதிகரித்தல் | 1 குறையும் |
| 2. உச்சத்தில் இருக்கும்போது | 2 பூஜ்ஜியமாகிறது |
| 3. குறையத் தொடங்கும்போது | 3. எதிர்மறையாகிறது |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**37)சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.**

**வரையறை:**


மார்ஷலின் கூற்றுப்படி "ஒரு மனிதன் பலவகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளைப் பெற்றிருந்தால் அதனை பல பயன்களிடையே பகிர்ந்தளிக்கும்போது அதன் இறுதிநிலைப் பயன்பாடு ஒரே அளவில் இருக்குமாறு சமமாய் பகிர்ந்து அளிப்பர்.

**அனுமானங்கள்:**

1.நுகர்வோர் ஒரு பகுத்தறிவாளர்
2.பயன்பாடு எண்ணளவில் அளவிடப்படும்
3.நிறைவுப் போட்டி நிலவுகிறது

**விளக்கம்:**

1.இரண்டு பண்டங்கள் மூலம் இவ்விதி விளக்கப்படுகிறது.(ஆப்பிள்,ஆரஞ்சு)
2.இரு பண்டத்தின் மீதும் தனது வருமானத்தைச் செலவு செய்து (சமமாக) அதிக திருப்தியை பெறுகிறார்.




வரைபடத்தில் X- அச்சில் செலவின் அளவும், Y- அச்சில் ஆப்பிள் மற்றும் ஆரஞ்சின் இறுதி நிலைப் பயன்பாடும் குறிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் தனது பணத்தை ஆப்பிள் மற்றும் ஆரஞ்சு ஆகியவற்றின் இறுதிநிலைப் பயன்பாடு சமமாகும் வகையில் செலவிடுவார்.

**38) தேவை நெகிழ்சியை அளவிடும் முறைகள் யாவை?**

தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள்:

**1.விழுக்காட்டு முறை:**

$$Ep = \frac{\Delta Q}{\Delta P} \cdot \frac{P}{Q}$$

**மொத்தச் செலவு முறை:**


நுகர்வோரின் மொத்தச் செலவில்(அ) நிறுவனத்தின் மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தை அளவிடுதல் மூலம் தேவை நெகிழ்ச்சியுள்ளதா(அ)நெகிழ்ச்சியற்றதா என அறிய முடியும்.

மொத்த வருவாய்= விலை×விற்பனை அளவு

TR = P × Q

**3.புள்ளி அல்லது வடிவியல் முறை:**

நேர் தேவைக்கோட்டில் குறிப்பிட்ட புள்ளியினுடைய கீழ் பகுதியை மேல் பகுதியால் வகுக்கக் கிடைக்கும் விகிதமாகும்.




**புள்ளி நெகிழ்ச்சி=தேவைக்கோட்டின் புள்ளிக்கு கீழ்ப்பகுதி/மேல்பகுதி**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## அத்தியாயம்-3
## உற்பத்தி பகுப்பாய்வு

<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

1. **முதன்மை உற்பத்திக் காரணிகளாவன**
அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு
ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
இ) நிலம் மற்றும் மூலதனம்
ஈ) நிலம் மற்றும் உழைப்பு
2. **மற்ற பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும், மனித முயற்சியால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள்**
அ) நிலம் ஆ) உழைப்பு
இ) மூலதனம் ஈ) தொழிலமைப்பு
3. **சராசரி உற்பத்தி (AP)யைக் கணக்கிடப் பயன்படும் விகிதம்**
அ) ΔTP/N ஆ) TP/ ΔN Δ
இ) TP/MP ஈ) TP/N
4. **எந்தக்காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது?**
அ) உழைப்பாளர் ஆ) நிலம்
இ) தொழிலமைப்போர் ஈ) மூலதனம்
5. **தோழில் முனைவோரின் முக்கிய குணம் உறுதியற்ற தன்மையை பொறுத்துக் கொள்ளல் என்ற கூற்றை கூறியவர் யார்?**
அ) ஜே.பி கிளார்க் ஆ) சும்பீட்டர்
இ) நைட் ஈ) ஆடம்ஸ்மித்
6. **ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது?**
அ) நுகர்வு சார்பு ஆ) உற்பத்தி சார்பு
இ) சேமிப்பு சார்பு ஈ) முதலீட்டு சார்பு
7. **ஒரு நிறுவனம் 5 அலகுகள் உற்பத்திக் காரணிகளை பயன்படுத்தி 24 அலகுகளை உற்பத்தி செய்கிறது. ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது உற்பத்தி 30 அலகுகளாக உயர்கிறது எனில் சராசரி உற்பத்தியை(AP) கணக்கிடு.**
அ) 30 ஆ) 6 இ) 5 ஈ) 24
8. **குறுகிய கால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?**
அ) விகித அளவு விளைவு விதி
ஆ) மாறும் விகித அளவு விளைவு விதி
இ) சமஅளவு உற்பத்திக் கோடு
ஈ) தேவைவிதி
9. **நீண்ட கால உற்பத்தி சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?**
அ) தேவை விதி ஆ) அளிப்பு விதி
இ) விகித அளவு விளைவு விதி
ஈ) மாறா விகித அளவு விளைவு விதி
10. **சம உற்பத்திக் கோட்டின் வேறு பெயர்**
அ) நெகிழ்ச்சியற்ற அளிப்பு கோடு
ஆ) நெகிழ்ச்சியற்ற தேவைக்கோடு
இ) சம-இறுதிநிலை பயன்பாடு
ஈ) சம-உற்பத்தி வளைகோடு
11. **நிறுவனத்தின் உள்ளிருந்து தோன்றும் சிக்கனத்திற்குக் காரணமாக அமைவது எது?**
அ) நிதி ஆ) தொழில்நுட்பம்
இ) மேலாண்மை ஈ) மேற்காணும் அனைத்தும்
12. **காப் - டக்ளஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாக கொண்டது?**
அ) வளர்ந்து செல் விகித விளைவு விதி
ஆ) குறைந்து செல் விகித விளைவு விதி
இ) மாறா விகித விளைவு விதி
ஈ) மேற்காணும் அனைத்தும்.
13. **உற்பத்திக் காரணிகளை 5 சதவீதம் அதிகரித்தால், வெளியீடு 5 சதவீதத்திற்கு மேல் அதிகரிப்பது எந்த விகித விளைவு விதியை சார்ந்தது?**
அ) வளர்ந்து செல்விளைவு விகித விதி
ஆ) குறைந்து செல்விளைவு விகித விதி
இ) மாறா விகித அளவு விளைவு விதி
ஈ) மேற்காணும் அனைத்தும்
14. **கீழ்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?**
அ) குறை அளிப்பு
ஆ) இயங்கும் தன்மையுடையது
இ) பலவகைப்படும்
ஈ) இயற்கையின் கொடை
15. **ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி**
அ) இறுதிநிலை உற்பத்தி
ஆ) மொத்த உற்பத்தி
இ) சராசரி உற்பத்தி
ஈ) ஆண்டு உற்பத்தி
16. **நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி**
அ) வளர்ந்து செல்விகித அளவு
ஆ) குறைந்து செல்விகித அளவு
இ) மாறா விகித அளவு
ஈ) மாறும் விகித அளவு
17. **உற்பத்தியாளர் சமநிலையை அடையும் புள்ளி எது?**
அ) இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம் (MRTS) விலை வீதத்தை விட அதிகமாக இருந்தால்
ஆ) (MRTS) விலை வீதத்தை விட குறைவானால்
இ) (MRTS)ம் விலை வீதமும் சமமாக இருந்தால்
ஈ) சம-உற்பத்திக் கோடும் சம-உற்பத்தி செலவு கோடும் வேறுபட்டிருந்தால்.
18. **பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு**
அ) எதிர்மறை
ஆ) நேர்மறை
இ) பூஜ்யம்
ஈ) அதிகரிக்கும்
19. **சராசரி உற்பத்தி குறையும்போது இறுதிநிலை உற்பத்தி**
அ) சராசரி உற்பத்தியை விட அதிகமாக இருக்கும்
ஆ) சராசரி உற்பத்தியை விட குறைவாக இருக்கும்
இ) அதிகரிக்கும்
ஈ) (அ) மற்றும் (இ)
20. **உற்பத்திச் சார்பு இவற்றிற்கிடையே உள்ள தொடர்பை விளக்குகிறது.**
அ) உள்ளீட்டு விலைக்கும் வெளியீட்டின் விலைக்கும் இடையே உள்ள தொடர்பு
ஆ) உள்ளீட்டு விலைக்கும் வெளியீட்டின் அளவிற்கும் இடையே உள்ள தொடர்பு
இ) உள்ளீட்டு அளவிற்கும் வெளியீட்டு அளவிற்கும் இடையே உள்ள தொடர்பு
ஈ) உள்ளீட்டு அளவிற்கும் உள்ளீட்டின் விலைக்கும் உள்ள தொடர்பு

**விடைகள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| ஈ | இ | ஈ | இ | இ | ஆ | இ | ஆ | இ | ஈ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| ஈ | இ | அ | ஆ | அ | அ | இ | ஆ | ஆ | இ |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பகுதி-ஆ 2மதிப்பெண் வினாக்கள்**

**21)உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து.**

1.நிலம் 2.உழைப்பு 3.மூலதனம் 4.அமைப்பு

**22) உழைப்பு – வரையறு.**

உழைப்பாளர் வருமானம் ஈட்டுவதற்காக தனது உழைப்புச் சக்தியைப் பயன்படுத்துவதாகும். -----மார்ஷல்

**23) உற்பத்தி சார்பினை குறிப்பிடுக.**

உள்ளீடுகளின் அளவுக்கும் வெளியீட்டு பொருள்களின் அளவுக்கும் இடையே உள்ள தொடர்பே உற்பத்தி சார்பு எனப்படும்.

**24) காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு.**

ஏற்கனவே உள்ள ஓர் உற்பத்திக் காரணியின் அளவில் ஒரு அலகு அதிகரிப்பு செய்யும்போது மொத்த உற்பத்தியில் ஏற்படும் நிகர அளவு மாற்றம இறுதிநிலை உற்பத்தியாகும்.

**25) சம உற்பத்தி செலவு கோடு என்றால் என்ன?**

ஒரு நிறுவனம் குறிப்பட்ட அளவு பணச்செலவில் வாங்கக்கூடிய இரு காரணிகளின் பல தொகுப்புகளை குறிப்பிடுவது.

**26) உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது?**

1.சம அளவு செலவுக்கோடு சம உற்பத்தி வளைகோட்டிற்கு தொடுகோடாக அமைய வேண்டும்.

2. அந்த தொடு புள்ளியில் சம உற்பத்தி வளைகோடு தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.

**27) அளிப்புக்கோடு மேல் நோக்கி செல்லக் காரணம் என்ன?**

ஒரு பண்டத்தின் விலை உயர்வால் அளிப்பு அதிகரிக்கும். விலை குறைந்தால் அளிப்பும் குறையும். ஆகவே அளிப்புக் கோடு கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும்.

**பகுதி - இ 3மதிப்பெண் வினாக்கள்**

**28)நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?**

1.நிலம் முதன்மை உற்பத்திக் காரணியாகும்.

2.நிலம் ஒரு செயலற்ற உற்பத்திக் காரணி.

3.இயற்கையின் கொடையாகும்.

4.உற்பத்தி செலவு இல்லை.

5.நிலத்தின் அளிப்பு மாறாது, நெகிழ்ச்சியற்றது.

6.நிலம் நிலையானது.

**29)அளிப்பு நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?**

1. **பொருட்களின் தன்மை** : நீடித்து நிலைக்கும் பொருட்களுக்கு நெகிழ்ச்சி அதிகமாக இருக்கும்.
2. **உற்பத்தி செலவு:** வளர்ந்து செல் விளைவு விதி செயல்பாட்டால், அளிப்பு அதிகரிக்கும். எனவே அளிப்பு நெகிழ்ச்சி அதிகமாக இருக்கும்.
3. **கால அளவு** : குறுகிய காலத்தில் நெகிழ்சியற்றும், நீண்ட காலத்தில் நெகிழ்ச்சியுடனும் காணப்படும்.

**30) தொழில் முனைவோரின் பணிகள் யாவை?**

1.துவக்கப் பணி

2.புத்தாக்கப் பணி

3.ஒருங்கிணைத்தல்

4.கட்டுப்படுத்துதல், வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையிடுதல்

5.இடர்பாடுகளை ஏற்றல்.

6.நிச்சமற்ற தன்மையை எதிர்கொள்ளுதல்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**31)அளிப்பு நெகிழ்ச்சியைப் பற்றிக் கூறுக.**


அளிப்பு நெகிழ்ச்சி என்பது விலை மாற்றத்திற்கு ஏற்ப அளிப்பில் ஏற்படும் மாற்ற விகிதம் ஆகும்.

$$\text{அளிப்பு நெகிழ்ச்சி} = \frac{\text{அளிப்பின் அளவில் ஏற்படும் விகிதாச்சார மாற்றம்}}{\text{விலையில் ஏற்படும் விகிதாச்சார மாற்றம்}}$$

**32)மொத்த, சராசரி, இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை விவரி?**

| நிலைகள் | மொத்த உற்பத்தி | இறுதிநிலை உற்பத்தி | சராசரி உற்பத்தி |
|---|---|---|---|
| 1 நிலை | உயர்தல் | உச்சம் | உச்சம் |
| 2 நிலை | உச்சம் | பூஜ்யம் | AP=MP |
| 3 நிலை | குறைதல் | எதிர்மறை | பூஜ்யத்தை விடஅதிகமாக இருக்கும். |

**33) உற்பத்தியாளர் சமநிலையை உதாரணத்துடன் விளக்குக.**




1.ஒரு குறிப்பிட்ட நிலையில் உற்பத்தியாளர் உச்சபட்ச உற்பத்தியை அடையும் நிலையாகும்.
2.உற்பத்திக் காரணிகளின் உத்தம அளவு எனவும் அழைக்கப்படுகிறது.
(உ.ம்) குறைந்த செலவில் அதிக உற்பத்தியை மேற்கொள்வதாகும்.

**34) காப் - டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.**

உழைப்பு மற்றும் மூலதனம் என்ற உள்ளீடுகளை பயன்படுத்தி எவ்வளவு உற்பத்தி செய்ய முடியும் என்பதனை விளக்குகிறது.

காப் டக்லஸ் உற்பத்தி சார்புக் கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றது.

$Q = AL^{\alpha} K^{\beta}$

இதில்


Q = வெளியீடு A = நேர்மறை நிலை மதிப்பு K = மூலதனம் L = உழைப்பு


$\alpha$ மற்றும் $\beta$ ஆகியவை நேர்மறை பின்னம் ஆகும். இவை உற்பத்தி உள்ளீடுகளான உழைப்பு மற்றும் மூலதனத்தின்அளவை மாற்றும்போது எந்த அளவு உற்பத்தியில் மாற்றம் வரும் என்பதைக் குறிக்கின்றன.

**பகுதி-ஈ 5 மதிப்பெண் வினாக்கள்**

**36) சம அளவு உற்பத்தி கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி.**
**1.சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகள்:**

**சம உற்பத்திக் கோடுகள் எதிர்மறை சரிவைச் தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும். கொண்டது.**








Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


**சம உற்பத்திக் கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது.**




**சம உற்பத்திக் கோடுகள் உயரே செல்லச்செல்ல உற்பத்தியின் அளவும் உயரும்.**




**சம உற்பத்திக் கோடு X அச்சினையோ அல்லது Y அச்சினையோ தொடாது.**




**38)அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்கள் விவரி.**

மார்ஷலின் கூற்றுப்படி பொருளாதார சிக்கனம் இரண்டு வகைப்படும்.

**1.அகச்சிக்கனம்:**

ஒரு நிறுவனத்துக்குள் ஏற்படும் மாற்றங்களால் ஏற்படும நன்மையைக் குறிக்கும்.

1.தொழில் நுட்பச் சிக்கனங்கள்
2.நிதிச் சிக்கனங்கள்
3.மேலாண்மை சிக்கனங்கள்
4.உழைப்புச் சிக்கனங்கள்
5.சந்தை சார்ந்த சிக்கனங்கள்
6.சந்தையில் தொடர்ந்திருப்பதன் சிக்கனங்கள்

**2.புறச்சிக்கனங்கள்:**

நிறுவனத்திற்கு வெளியே ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தியின் முறைகளில் ஏற்படும் மேம்பாடுகளைக் குறிக்கும்.

1.மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்
2.வங்கி செயல்பாடு சார்ந்த வசதிகள்
3.நகரியல் வளர்ச்சி
4.தகவல் மற்றும் தொலைத் தொடர்பு வசதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## அத்தியாயம்-4
## செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1) **செலவு என்பது**
அ) விலை
ஆ) மதிப்பு
இ) மாறாச் செலவு
ஈ) உற்பத்தி

2) **செலவுச் சார்புகளை ………….. சார்புகள் எனலாம்**
அ) உற்பத்தி
ஆ) முதலீடு
இ) தேவை
ஈ) நுகர்வு

3) **பணச் செலவை ………… செலவு என்றும் அழைக்கலாம்.**
அ) வெளியுறு
ஆ) உள்ளுறு
இ) சமூக
ஈ) உண்மை

4) **வெளியுறு செலவுகள் மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் ……….. செலவாகும்.**
அ) சமூக
ஆ) பொருளாதார
இ) பண
ஈ) மாறா

5) **வெளியுறு செலவுகள் என்பது**
அ) கையிலிருந்து செய்யும் செலவுகள்
ஆ) உண்மைச் செலவுகள்
இ) சமூகச் செலவு
ஈ) மூழ்கும் செலவுகள்

6) **தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனத்திற்கு செய்யும் செலவு……**
அ) உண்மைச் செலவு
ஆ) வெளியுறு செலவு
இ) பணச் செலவு
ஈ) உள்ளுறு செலவு

7) **உற்பத்தியின் எல்லா மட்டங்களிலும் மாறாத செலவுகள்**
அ) மாறாச் செலவு
ஆ) மாறும் செலவு
இ) உண்மைச் செலவு
ஈ) சமூகச் செலவு

8) **சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு**
அ) TC / Q
ஆ) TVC / Q
இ) TFC / Q
ஈ) TAC / Q

9) **ஒரு அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு**
அ) மாறும் செலவு
ஆ) மாறாச் செலவு
இ) இறுதிநிலைச் செலவு
ஈ) மொத்தச் செலவு

10) **உற்பத்திக்கு ஏற்றாற் போல் மாறும் செலவு……செலவு** எனப்படும்
அ) பண
ஆ) மாறும்
இ) மொத்த
ஈ) மாறா

11) **கூலி …….. செலவுக்கு எடுத்துக்காட்டாகும்**
அ) மாறா
ஆ) மாறும்
இ) இறுதிநிலை
ஈ) வாய்ப்பு

12) **ஒரு அலகு உற்பத்திக்கான செலவு ………. செலவாகும்.**
அ) சராசரி
ஆ) இறுதி நிலை
இ) மாறும்
ஈ) மொத்த

13) **சராசரிச் செலவுக்கான வாய்ப்பாடு**
அ) AVC / Q
ஆ) TC / Q
இ) TVC / Q
ஈ) AFC / Q

14) **மொத்த மாறாச் செலவு 100. மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்தச் செலவைக் கணக்கிடுக.**
அ) 125
ஆ) 175
இ) 225
ஈ) 325

15) **நீண்ட கால சராசரி செலவுக் கோடு …… கோடு என அழைக்கப்படுகிறது.**
அ) தேவைக்
ஆ) திட்ட
இ) உற்பத்தி
ஈ) விற்பனை

16) **பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ……. வருவாயாகும்.**
அ) இலாபம்
ஆ) மொத்த
இ) சராசரி
ஈ) இறுதிநிலை

17) **ஒரு அலகு பொருளை கூடுதலாக விற்பதால் கிடைக்கும் வருவாய் ………… வருவாயாகும்.**
அ) இலாபம்
ஆ) சராசரி
இ) இறுதிநிலை
ஈ) மொத்த

18) **இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள ……. உடன் கூடுதலாக பெறுவது.**
அ) மொத்த விற்பனை
ஆ) மொத்த வருவாய்
இ) மொத்த உற்பத்தி
ஈ) மொத்தச் செலவு

19) **விலை நிலையாக இருக்கும்போது AR கோடு MR கோட்டுக்கு …….. ஆக இருக்கும்.**
அ) சமமாக
ஆ) அதிகமாக
இ) குறைவாக
ஈ) தொடர்பற்று

20) **ஒரு புத்தகம் ரூ.10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார், எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்**
அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400

**விடைகள்:**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஈ | அ | அ | ஆ | அ | ஈ | அ | ஆ | இ | ஆ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| ஆ | அ | ஆ | இ | ஆ | ஆ | இ | ஆ | அ | ஈ |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பகுதி-1 2மதிப்பெண் வினாக்கள்:**

**21)செலவை வரையறு.**

ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்திச் செலவு ஆகும்.

**22)செலவுச் சார்பை வரையறு.**

செலவுச் சார்பு என்பது மொத்த செலவிற்கும், உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது. அல்லது Q=f(C)

**23)மாறாச் செலவு என்றால் என்ன?**

1.மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை.
(எ.கா) இயந்திரத்திற்கான செலவு.

**24)வருவாயை வரையறு.**

ஒரு விற்பனையாளர் தன் பண்ட பரிமாற்றத்தின் மூலம் ஈட்டுகின்ற பணமே வருவாய் ஆகும். அதாவது,

**25)வெளியுறு செலவு – வரையறு.**

*உற்பத்திக் காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் செலுத்துகையே வெளிப்படையான செலவுகள் ஆகும். எ.கா. கூலி, வாடகை.*

**26)உணமைச் செலவு-இலக்கணம் தருக.**

உண்மை செலவு என்பது அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள், முயற்சிகள் மற்றும் தியாகங்களாகும்.

**27)மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?**

மீட்டு எடுக்க முடியாத, கடந்த காலச்செலவுகள் அமிழ்த்தப்பட்ட செலவு அல்லது மூழ்கும் செலவு எனப்படும்.

**பகுதி-2 3மதிப்பெண் வினாக்கள்**

**28)மாறாச் செலவை மாறும் செலவிலிருந்து வேறுபடுத்துக.**

| வ.எண் | மாறாச் செலவு | மாறும் செலவு |
|---|---|---|
| 1 | உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுவதில்லை | உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடும். மாறும் காரணிகளுக்கான செலவு. |
| 2 | மாறாக் காரணிககளுக்கான செலவு (எ.கா) 1.இயந்திரத்திற்கான செலவு 2.நிரந்தர ஊழியர்களுக்கான ஊதியம் போன்றவைகள். | (எ.கா)1.மூலப் பொருட்களுக்கான செலவு 2.மின்கட்டணம் போன்றவைகள் |

**29)பணச்செலவு – உண்மைச்செலவு வேறுபாடுகளைக் கூறுக.**

| வ.எண் | பணச்செலவு | உண்மைச்செலவு |
|---|---|---|
| 1. | உற்பத்திச் செலவுகள் பணத்தால் குறிப்பிடப்படுவது | அனைத்து காரணிகளின் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சங்கடங்கள், முயற்சிகள், தியாகங்கள் |
| 2 | பொருளை உற்பத்தி செய்ய பணமாக செலவிடுகின்ற செலவு | முதலீட்டாளர்கள் நுகர்வின் துறப்பின் மூலம் சேமித்து முதலீடு செய்வது |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**30)வெளியுறு செலவு – உள்ளுறு செலவு வேறுபடுத்துக.**

| வ.எண் | வெளியுறு செலவு | உள்ளுறு செலவு |
|---|---|---|
| 1. | உற்பத்திக் காரணிகளை வாங்க மற்றவர்களுக்கு செலுத்தும் தொகை | நிறுவனத்திற்கு சொந்தமான உற்பத்தி வளங்களுக்கு வழங்கும் தொகை |
| 2 | (எ.கா)1.மூலப்பொருட்களுக்கான செலவு வாடகை, வட்டி, போக்குவரத்து செலவு போன்றவைகள் | எ.கா).உரிமையாளருக்கு சொந்தமான நிலம், கட்டிடம், வாகனங்களை உற்பத்தி முயற்சிகளில் பயன்படுத்துவது. |

**31)வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.**


1.ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தெடுக்கப்படுவதால் அதன் அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக்கொடுக்கப்படவேண்டியுள்ளது.

2.(எ.கா)ஒரு விவசாயி தன் நிலத்தில் நெல் அல்லது கரும்பை பயிரிட முடியும். நெல்லை விளைவித்தால் கரும்பு உற்பத்தியை விட்டுக் கொடுக்க வேண்டும். இதுவே வாய்ப்புச் செலவு அல்லது பிற வாய்ப்புச் செலவு அல்லது மாற்றுச் செலவு அல்லது பரிமாற்றச் செலவு எனப்படும்.

**32.AC மற்றும் MC – தொடர்பினை விளக்குக.**

1. புள்ளி E-க்கு இடதுபுறம் MC < AC
2. புள்ளி E-யில் MC = AC
3. புள்ளி E-க்கு வலதுபுறம் MC > AC

.





**33. இறுதிநிலை வருவாய் – குறிப்பு வரைக.**

- இறுதிநிலை வருவாய் என்பது கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படும் கூடுதல் இறுதிநிலை வருவாய் எனப்படும்.
- MR = $\frac{\Delta TR}{\Delta Q}$
- MR = $TR_n - TR_{n-1}$

34. நீண்ட கால செலவு வளைகோட்டை தக்க வரைபடத்துடன் விளக்குக.

- நீண்டகாலத்தில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் மாறக் கூடியவை.
- குறுகியகால சராசரி செலவுக் கோடுகளின் அடிமட்ட புள்ளியை இணைத்தால் நீண்டகால சராசரி செலவுக் கோட்டைப் பெறலாம்.
- நீண்டகால சராசரி செலவு வளைகோடானது 'திட்ட வளைகோடு' அல்லது 'உறைவடிவ வளைகோடு' என்றும் அழைக்கப்படுகிறது.






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com


**37. பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR- மற்றும் MR- கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.**

**மாறாத விலையில் AR .MR –கோடுகள்**

- வரைபடம் 1- ல் உள்ளது போல AR=MR கோடு இணைந்து படுகிடைக் கோடாக இருக்கும்.

**மாறும் விலையில் AR .MR –கோடுகள்**

வரைபடம் 2-ல்உள்ளது போல் AR,MR –குறைந்து கொண்டே செல்லும். MR-ஆனாது AR-விட அதிகமாக குறைந்து கொண்டே செல்லும்.






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அத்தியாயம்-05
## அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்

**சரியான விடையைத் தேர்தெடுக்கவும்:**

1) **கீழ்க்கண்டவற்றுள் எந்த வகையான அங்காடியில் விலை மிக அதிகமாக இருக்கும்?**
அ) நிறைவுப் போட்டி ஆ)முற்றுரிமை
இ) இருமுக முற்றுரிமை
ஈ) சில்லோர் முற்றுரிமை

2) **நிறுவனத்தின் சமநிலை என்பது**
அ)MC =MR ஆ) MC >MR
இ)MC<MR ஈ) MR=PRICE

3) **கீழ்க்கண்டவற்றுள் எது முற்றுரிமைப் போட்டியின் இயல்புகள்?**
அ) ஒரு விற்பனையாளர்
ஆ) சில விற்பனையாளர்
இ) பண்ட வேறுபாடு
ஈ) உள்ளே நுழைய முடியாது

4) **முற்றுரிமை நிறுவனம் குறுகிய காலத்தில்.......................... பெறும்**
அ) இயல்பு இலாபம்
ஆ) நஷ்டம்
இ) அதிக இலாபம்
ஈ) அதிக நஷ்டம்

5) **கீழ்க்கண்டவற்றுள் உபரி திறன் இல்லாதது .........................**
அ) முற்றுரிமை
ஆ) முற்றுரிமை போட்டி
இ) சில்லோர் முற்றுரிமை
ஈ) நிறைவுப்போட்டி

6) **எப்போது நிறுவனம் இலாபம் பெறமுடியும்?**
அ)TR<TC
ஆ)TR-MC
இ)TR>Tc
ஈ)TR=TC

7) **விலையின் மற்றொரு பெயர் ................**
அ) சராசரி வருவாய்
ஆ) இறுதிநிலை வருவாய்
இ) மொத்த வருவாய்
ஈ) சராசரி செலவு

8) **எந்த அங்காடியில் AR மற்றும் MR சமமாகும்**
அ) இருவர் முற்றுரிமை
ஆ) நிறைவு போட்டி
இ) முற்றுரிமை போட்டி
ஈ) சில்லோர் முற்றுரிமை

9) **முற்றுரிமையில் MR கோடு ..............................கோட்டிற்கு கீழிருக்கும்.**
அ) TR
ஆ) MC
இ) AR
ஈ) AC

10) **நிறைவுபோட்டி அனுமானிப்பது......**
அ) ஆடம்பர பண்டம்
ஆ) உற்பத்தியாளர் பண்டம்
இ) வேறுபடுத்தபட்ட பண்டம்
ஈ) ஒத்ததன்மை பண்டம்

11) **குழுச்சமநிலை ஆராய்வது .............**
அ) முற்றுரிமை போட்டி ஆ)முற்றுரிமை
இ) இருவர் முற்றுரிமை ஈ)தூய போட்டி

12) **முற்றுரிமை போட்டியின் முக்கிய பண்பு**
அ) ஒரே விதமான உற்பத்தி
ஆ) விற்பனைச் செலவு
இ) ஒரு விற்பனையாளர்
ஈ) ஒரு வாங்குபவர்

13) **முற்றுரிமை போட்டி ..........ஆகும்.**
அ) சில்லோர் முற்றுரிமை
ஆ) இருவர் முற்றுரிமை
இ) நிறைகுறை போட்டி
ஈ) முற்றுரிமை

14) **விலை தலைமை அம்சம் கொண்டது**
அ) நிறைவு போட்டி
ஆ) முற்றுரிமை
இ) சில்லோர் முற்றுரிமை
ஈ) முற்றுரிமையாளர் போட்டி

15) **விலைபேதம் காட்டுதலின் விளைவு........................ ஆகும்..**
அ) குறைவான உற்பத்தி
ஆ) அதிக இலாபம்
இ) பல்வேறு விலை
ஈ) ஆ மற்றும் இ

16) **முற்றுரிமைப் போட்டியில் சாரசரி வருவாய் கோடு**
அ) முற்றிலும் நெகிழ்ச்சியற்றது
ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ளது
இ) பெருமளவு நெகிழ்ச்சியுள்ளது
ஈ) ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ளது

17) **நிறைவுப்போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு....**
அ) நிலையானது
ஆ) படுகிடை
இ) எதிர்மறைசரிவு
ஈ) நேர்மறைசரிவு

18) **எந்தவகை அங்காடியில் போட்டியே இராது?**
அ) நிறைவு போட்டி
ஆ) முற்றுமை
இ) முற்றுமை போட்டி
ஈ) சில்லோர் முற்றுமை

19) **கீழ்கண்டவற்றுள் எந்தவகை அங்காடியில் நுகர்வோர் அதிகம் சுரண்டப்படுகிறார்கள்?**
அ) நிறைவு போட்டி
ஆ) முற்றுமை
இ) முற்றுமையாளர் போட்டி
ஈ) சில்லோர் முற்றுமை

20) **விற்பனை செலவிற்கு உதாரணம்**
அ) கச்சாப் பொருள் விலை
ஆ) போக்குவரத்து செலவு
இ) விளம்பர செலவு
ஈ) கொள்முதல் செலவு

**விடைகள்:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| ஆ | அ | இ | இ | ஈ | இ | அ | ஆ | இ | ஈ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| அ | ஆ | இ | இ | ஈ | இ | ஆ | ஆ | ஆ | இ |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மதுரை மாவட்டம்

**2 மதிப்பெண் வினாக்கள்**


1. **அங்காடி - வரையறு**
   பொருட்கள் வாங்கும் மற்றும் விற்கும் இடம்.


2. **விலையை ஏற்பவர் யார்?**
   நிறைவுப் போட்டியில் நிறுவனம் விலை ஏற்பவராக இருக்கிறது.

3. **தூய போட்டியின் இன்றியமையாத பண்பை குறிப்பிடு.**
   (அ) எண்ணற்ற வாங்குபவர் மற்றும் விற்பவர்
   (ஆ) ஒரே இயல்பான பொருட்கள்

4. **விற்பனை செலவு என்றால் என்ன?**
   நிறுவனம் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் செலவு விற்பசைன் செலவு ஆகும். (எ.கா) விளம்பரம்.

5. **கீழ்க்காணும் நிறுவனத்தின் தேவைக்கோடு வரைக.**
   **(அ) நிறைவுப்போட்டி** **(ஆ) முற்றுரிமை.**




6. **விலை பேதம் காட்டுதலின் இரண்டு தன்மைகள் கூறு.**
   - தனிநபர் பேதம் - பல்வேறு நபர்களுக்கு பல்வேறு விலை
   - இடபேதம் - வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விலை

7. **உபரி சக்தி - விளக்குக.**
   உத்தம அளவு உற்பத்திக்கும் உண்மை அளவு உற்பத்திக்கும் உள்ள வேறுபாடாகும்.

**(3 Marks)**

1. **அங்காடியின் இயல்புகள் யாவை?**
   அ. ஒரு பொருள் அல்லது பணியை வாங்குபவர்களும், விற்பவர்களும் இருக்க வேண்டும்.
   ஆ. ஒரு பொருள் இருக்க வேண்டும்.
   இ. இருவரும் ஒப்புக்கொள்ளும் விலை இருக்க வேண்டும்.
   ஈ. நேரடி அல்லது மறைமுக பரிமாற்றம் இருக்க வேண்டும்.

2. **நிறைவுப் போட்டி மற்றும் முற்றுரிமை அங்காடிகளில் "உள்ளே நுழைதல்" தன்மை யாது.**
   - நிறைவுப் போட்டியில் புதிய நிறுவனங்கள் தொழிலில் நுழைய தடையில்லை
   - முற்றுரிமையியல் - புது நிறுவனங்கள் உள்ளே நுழைய தடை உண்டு

3. **விலை பேதம் காட்டுதலின் நிலைகளை விளக்குக.**
   **அ.முதல் நிலை விலை பேதம் காட்டுதல் :-**
   வாங்குபவர் அதிகபட்சமாக எவ்வளவு விலையை தர முன்வருவாரோ அந்த அளவு விலையை அவரிடம் வசூலித்து விடுவது ஆகும்.
   **ஆ. இரண்டாம் நிலை விலை பேதம் காட்டுதல்**
   நுகர்வோர் உபரியில் ஒரு பகுதியை மட்டும் விற்பனையாளர் எடுத்துக்கொள்வது.
   **இ. மூன்றாவது நிலை விலை பேதம் :**
   முற்றுரிமையாளர் அங்காடியை துணை அங்காடிகளாக பிரித்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான விலையைப் பெறுபது ஆகும்.

4. **விற்பனை செலவு என்றால் என்ன? எ.கா. கூறி விளக்குக.**
   முற்றுரிமை போட்டியில் நிறுவனங்கள் பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க விளம்பரங்கள் செய்ய ஆகும் செலவு விற்பனை செலவு ஆகும். (எ.கா.) தொலைக்காட்சி, செய்தித்தாள் விளம்பரங்கள்.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



5. **நிறைவுப் போட்டி மற்றும் முற்றுரிமைப் போட்டிக்கான ஒற்றுமையை விளக்குக.**

| இயல்புகள் | நிறைவுப்போட்டி | முற்றுரிமைப் போட்டி |
|---|---|---|
| உற்பத்தியாளர்கள்/ விற்பனையாளர்கள் | எண்ணற்றவர்கள் | பலர் |
| உட்புகுதல்/ வெளியேறுதல் | தடையற்றது | எளிது |
| சமநிலை | MC=MR | MC=MR |

6. **நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடு.**

**நிறுவனம்:** ஒரு தனி அமைப்பு பண்டங்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
எ.கா. ராம்கோ சிமெண்ட் உற்பத்தி செய்யும் ஒரு அலகு.

**தொழிற்சாலை:** பல நிறுவனங்களின் கூட்டமைப்பு தொழிற்சாலை ஆகும்.
(எ.கா.) சிமெண்ட் தொழிற்சாலை

7. **இருவர் முற்றுரிமையின் இயல்புகள்**

- விற்பனையாளர்கள் போட்டியாளர் பற்றி முழுமையாக அறிந்திருப்பார்.
- இருவருக்கும் இடையில் உடன்பாடு இருக்கும்.
- முறையற்ற போட்டியில் ஈடுபடலாம்.
- உற்பத்தி பண்டங்களில் வேறுபாடு இல்லை.
- அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் விலை அதிகமாக இருக்கும்.

(5 Marks)

1. நிறைவுப்போட்டியின் இயல்புகளை விளக்கவும்?

**நிறைவுப்போட்டி**

இது எண்ணற்ற விற்பனையாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும் நிறைவுப் போட்டியில் ஒரே விலை நிலவும் பண்டங்கள் ஒன்றுக்கொன்று பதிலீடாகவும் இருக்கும்.

**இயல்புகள்:**

1. **எண்ணற்ற வாங்குவோரும், விற்போரும்**
   அங்காடியில் எண்ணற்ற வாங்குவோரும், விற்பனையாளர்களும் இருப்பர்.
2. **ஒரே தன்மையுடைய பண்டங்கள் -**
   இங்கு விற்கப்படும் பண்டங்கள் ஒன்றுக்கொன்று பதிலீட்டுப் பண்டங்களாக இருக்கும்.
3. **அங்காடி நிலைபற்றி முழுமையாக அறிந்திருத்தல் -**
   வாங்குவோர் கூடுதல் விலை கொடுக்கவோ, விற்போர் குறைந்த விலையை பெற்றுக் கொள்ளவோ மாட்டார்கள்.
4. **உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை**
   இது நீண்டகாலத்தில் மட்டும் ஏற்படக் கூடியதாகும்.
5. **உற்பத்திக் காரணிகள் இடம்பெயரும்**
   உற்பத்திக் காரணிகள் அதிக வருமானம் கிடைக்கும் போது ஒரு தொழிற்சாலையில் இருந்து மற்றொரு தொழிற்சாலைக்கு இடம்பெயரும்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அத்தியாயம்-06
# பகிர்வு பற்றிய ஆய்வு

<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

1) **பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது எதனுடன் தொடர்புடையது?**
அ) உற்பத்திக் காரணிகள்
ஆ) தனிநபர்
இ) நிறுவனங்கள்
ஈ) வணிகர்கள்

2) **பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?**
அ) உற்பத்தி விலைக் கோட்பாடு
ஆ) காரணி விலைக் கோட்பாடு
இ) கூலிக் கோட்பாடு
ஈ) வட்டிக் கோட்பாடு

3) **எதனைப் பயன்படுத்துவதற்கான வெகுமதியே வாரம் ஆகும்?**
அ) மூலதனம்
ஆ) உழைப்பாளி
இ) நிலம்
ஈ) அமைப்பு

4) **போலி வாரம் என்ற கருத்து யாருடன் தொடர்புடையது?**
அ) ரிக்கார்டோ
ஆ) கீன்ஸ்
இ) வாக்கர்
ஈ) மார்ஷல்

5) **தொன்மை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் யார்?**
அ) ரிக்கார்டோ
ஆ) கீன்ஸ்
இ) மார்ஷல்
ஈ) வாக்கர்

6) **நிலத்திற்கு உண்மையானதும் அழிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தைப் பயன்படுத்தியவர்**
அ) JS மில்
ஆ) வாக்கர்
இ) கிளார்க்
ஈ) ரிக்கார்டோ

7) **உழைப்பாளருக்கான வெகுமதி__________**
அ) வாரம்
ஆ) கூலி
இ) இலாபம்
ஈ) வட்டி

8) **பணக்கூலியின் வேறுபெயர்**
அ) உண்மைக்கூலி
ஆ) பெயரளவுக் கூலி
இ) சரியான கூலி
ஈ) மாற்றுக் கூலி

9) **எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்**
அ) கீன்ஸ்
ஆ) வாக்கர்
இ) ஹாலே
ஈ) நைட்

10) **முதலீட்டை பயன்படுத்துவற்கான வெகுமதி**
அ) வாரம்
ஆ) கூலி
இ) வட்டி
ஈ) இலாபம்

11) **கீன்சின் வட்டிக் கோட்பாடு இவ்வாறு வழங்கப்படுகிறது.**
அ) துய்ப்பு தவிர்ப்பு கோட்பாடு
ஆ) நீர்மை விருப்பக் கோட்பாடு
இ) கடன் நிதிக் கோட்பாடு
ஈ) ஏஜியோ கோட்பாடு

12) **கடன் நிதிக் கோட்பாட்டின்படி கடன் நிதிகளின் அளிப்பு இதற்குச் சமமாகும்.**
அ) S+BC+DH+DI
ஆ) I+DS+DH+BC
இ) S+DS+BC+DI
ஈ) S+BC+DH+DS

13) **எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.**
அ) பரிமாற்ற நோக்கம்
ஆ) முன்னெச்சரிக்கை நோக்கம்
இ) ஊக நோக்கம்
ஈ) தனிப்பட்ட நோக்கம்

14) **தனி நபர்களுக்கு நாட்டின் செல்வத்தை அல்லது வருமானத்தைப் பகிர்ந்தளிப்பது என்பது_______**
அ) செயல்முறைப் பகிர்வு
ஆ) தனி நபர்பகிர்வு
இ) பண்டங்களின் பகிர்வு
ஈ) பணிகளின் பகர்வு

15) **இலாபம் இதற்கான வெகுமதி ஆகும்**
அ) நிலம்
ஆ) அமைப்பு
இ) மூலதனம்
ஈ) உழைப்பு

16) **புத்தாக்க இலாபக் கோட்பாட்டை வழங்கியவர் _____**
அ) ஹாலே
ஆ) சும்பீட்டர்
இ) கீன்ஸ்
ஈ) நைட்

17) **போலிவாரம் இதனால் தோன்றுகிறது.**
அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள்
ஆ) வீட்டில் தயார் செய்தவை
இ) இறக்குமதிப் பொருட்கள்
ஈ) எதுவுமில்லை

18) **"ஓர் உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளி தன் பணியை வழங்கியதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்" இதைக் கூறியவர் யார்?**
அ) பென்ஹாம்
ஆ) மார்ஷல்
இ) வாக்கர்
ஈ) J.S.மில்

19) **துய்ப்பு தவிர்ப்பு வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்**
அ) ஆல்ஃப்ரட் மார்ஷல்
ஆ) N.W.சீனியர்
இ) போம் போவர்க்
ஈ) நட்விக்சல்

20) **கடன் நிதி வட்டிக் கோட்பாடானது _______**
அ) தொன்மைக் கோட்பாடு
ஆ) நவீன கோட்பாடு
இ) மரபுக் கோட்பாடு
ஈ) புதிய தொன்மைக் கோட்பாடு

**விடைகள்:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| அ | ஆ | இ | ஈ | அ | ஈ | ஆ | ஆ | ஆ | இ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| ஆ | அ | ஆ | ஆ | ஆ | ஆ | அ | அ | ஆ | ஈ |



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**36. கொர்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி?**


"வாரம் என்பது நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே ஆகும்". - ரிக்கார்டோ

**எடுகோள்கள்:**

1. நிலம் வளத்தில் வேறுபட்டது.
2. வேளாண்மையில் குறைந்த செல் விளைவு விதி செயல்படுகிறது.
3. நிலத்தின் வளம், அமைவிடம் பொறுத்து வாரம் அமைகிறது.
4. அதிக வளமுள்ள நிலம் முதலில் பயிர் செய்யப்படுகின்றது.
5. வாரம் இல்லா நிலம் உண்டு

**அட்டவணை மற்றும் வரைபடம்**

| நிலத்தின் தரம் | உற்பத்தி (மூட்டைகளில்) | உபரி (வாரம்) (மூட்டைகளில்) |
|---|---|---|
| A | 40 | 40-20= 20 |
| B | 30 | 30-20= 10 |
| C | 20 | 20-20= 0 |




அ. A, B மற்றும் C ஆகிய மூன்று தரமுள்ள நிலங்கள்

ஆ. A, B நிலங்கள் வாரம் பெறும்.

இ. C வாரம் இல்லா நிலமாகும்.

**குறைபாடுகள் :**

1. முதலில் வாரம் பொருந்திய நிலம், பின்னர் வளம் குறைந்த நிலத்தை பயிரிடுபவர் எந்த வரிசை ஏற்புடையதல்ல



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அத்தியாயம்-07
## இந்தியப் பொருளாதாரம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1) **கர்நாடகத்தின் முக்கிய தங்கச் சுரங்கப் பகுதி**
அ) கோலார்
ஆ) இராமகிரி
இ) அனந்தபூர்
ஈ) கொச்சின்

2) **ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அளவிடப்படுவதைக் குறிப்பிடுவது**
அ) GNP
ஆ) GDP
இ) NNP
ஈ) தலாவருமானம்

3) **கீழ்க்கண்டவற்றுள் எது முன்னேற்றம் அடைந்த நாடு?**
அ) மெக்ஸிகோ
ஆ) கானா
இ) பிரான்ஸ்
ஈ) ஸ்ரீலங்கா

4) **வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம்**
அ) நான்கு
ஆ) ஏழு
இ) ஐந்து
ஈ) பத்து

5) **கலப்புப் பொருளாதாரம் என்பது_______**
அ) தனியார்துறை மற்றும் வங்கிகள்
ஆ) பொது மற்றும் தனியார்துறைகள் சேர்ந்து செயல்படுவது
இ) பொதுத்துறை மற்றும் வங்கிகள்
ஈ) பொதுத்துறைகள் மட்டும்

6) **இந்தியப் பொருளாதாரம் _______ காரணமாக வலிமையின்மையாக இருக்கிறது.**
அ) பொருளாதாரச் சமநிலையின்மை
ஆ) கலப்புப் பொருளாதாரம்
இ) நகரமயமாதல்
ஈ) போதுமான வேலைவாய்ப்புகள் இருப்பது

7) **மக்கள் தொகையின் இயல்புகளைப் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு**
அ) இட அமைப்பியல்
ஆ) மக்கள் தொகையியல்
இ) புவியியல்
ஈ) தத்துவவியல்

8) **மக்கள் தொகையில் 1921-ம் வருடம் _______ எனப்படுகிறது.**
அ) சிறிய பிரிவினை வருடம்
ஆ) மக்கள் தொகைவெடிப்பு வருடம்
இ) நகர மயமாதல் வருடம்
ஈ) பெரும் பிரிவினை வருடம்

9) **எந்த ஆண்டில் இந்திய மக்கள் தொகை நூறு கோடியைத் தாண்டியது?**
அ) 2000
ஆ) 2001
இ) 2005
ஈ) 1991

10) **ஆயிரம் மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது**
அ) கச்சா இறப்பு வீதம்
ஆ) கச்சா பிறப்பு வீதம்
இ) கச்சா சிசு வீதம்
ஈ) மகப்பேறு இறப்பு வீதம்

11) **ஆயிரம் மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது**
அ) கச்சா இறப்பு வீதம்
ஆ) இறப்பு வீதம்
இ) சோர்வு வீதம்
ஈ) கச்சா பிறப்பு வீதம்

12) **மக்கள் தொகை அடர்த்தி என்பது**
அ) நிலத்தின் அளவு / மக்கள் தொகை
ஆ) நிலத்தின் அளவு / வேலைவாய்ப்பு
இ) மக்கள் தொகை / குறிப்பிட்ட நில அளவு
ஈ) மக்கள் தொகை / வேலைவாய்ப்பு

13) **தேசிய வளர்ச்சி கழகத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?**
அ) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
ஆ) ஜவஹர்லால் நேரு
இ) டாக்டர் இராதாகிருஷ்ணன்
ஈ) V.K.R.V இராவ்

14) **காந்தியப் பொருளாதாரச் சிந்தனைகளை தொடர்ந்து வலியுறுத்தியவர் யார்?**
அ) ஜவஹர்லால் நேரு
ஆ) V.K.R.V இராவ்
இ) J.C குமரப்பா
ஈ) A.K. சென்

15) **ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டு வந்தவர்**
அ) ஜவஹர்லால் நேரு
ஆ) P.C மஹலனோபிஸ்
இ) டாக்டர். இராஜேந்திர பிரசாத்
**ஈ) இந்திராகாந்தி**

16) **B.R அம்பேத்கர் இந்தியப். பொருளாதாரப் பிரச்சனைகளை இதன் அடிப்படையில் ஆராய்கிறார்**
அ) குறைந்த நிலவுடைமை மற்றும் தீர்வுகள்
ஆ) இந்திய ரூபாயின் சிக்கல்கள்
இ) சமதர்மப் பொருளாதாரம்
ஈ) மேற்கண்ட அனைத்தும்

17) **இந்த கொள்கையின் அடிப்படையில் காந்தியப் பொருளாதாரம் இயங்குகிறது.**
அ) சமதர்மச் சிந்தனை
ஆ) ஒழுக்க நெறி அடிப்படை
இ) கோபால கிருஷ்ண கோகலே
ஈ) தாதாபாய் நௌரோஜி

18) **V.K.R.V இராவ் இவரின் மாணவராக இருந்தார்**
அ) J.M. கீன்ஸ்
ஆ) காலின் கிளார்க்
இ) ஆடம் ஸ்மித்
ஈ) ஆல்பிரட் மார்ஷல்

19) **பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியாசென் பெற்ற ஆண்டு**
அ) 1998 ஆ) 2000
இ) 2008 ஈ) 2010

20) **திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துகள் குறிப்பாகச் கூறுவது.**
அ) செல்வம்
ஆ) வறுமை சமூதாயத்தின் சாபம்
இ) வேளாண்மை
ஈ) மேற்காண் அனைத்தும்

**விடைகள்:**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஆ | ஆ | அ | ஆ | ஈ | ஆ | அ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| ஈ | இ | ஆ | இ | அ | ஆ | ஆ | அ | அ | ஈ |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மதுரை மாவட்டம்

## 2 Marks

1. **பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக.**
   ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உயர்வைக் குறிக்கும். இது GDP-யால் மதிப்பிடப்படுகிறது.

2. **முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளை கூறுக.**
   - உயர்ந்த நாட்டு வருமான வளர்ச்சி
   - உயர்ந்த தனிநபர் வருமானம்.
   - உயர்ந்த வாழ்கைத் தரம்
   -

3. **இயற்கைவளங்களைப் பற்றிக்குறிப்பு வரைக.**
   ஒரு நாட்டில் இயற்கையிலிருந்து பெறப்படும் வளங்கள் இயற்கை வளங்கள், காடு, நீர், கனிம வளங்கள்.

4. **இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக்கூறு.**
   இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம். இந்தியாவில் தனியார் துறையும் பொதுத் துறையும் இணைந்து செயல்படுகிறது.

5. **புதுப்பிக்கப்பட்ட இயலாத ஆற்றல் வளங்கள் தருக.**
   மீண்டும் உருவாக்கப்பட முடியாத வளங்கள் புதுப்பிக்க இயலாத வளங்கள் ஆகும் எ.கா.படிம எரிபொருட்கள் நிலக்கரி, பெட்ரோலியம் கனிமங்கள் போன்றன.

6. **"தொழில் நுட்ப செறிவு" பற்றி சென் கூறுவன என்ன?**
   உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் மூலதன செறிவு நுட்ப முறையில், வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று சென் குறிப்பிடுகிறார்.

7. **குறைந்த தலாவருமானம் இருக்க காரணங்களாக ராவ் கூறுவதைப் பட்டியிலிடுக.**
   1.முறையற்ற நிலவுடைமை, 2. முதலீடு இன்மை 3. பேரளவு தொழில் துறை இன்மை

## 3 Marks

8. **பொருளாதார முன்னேற்றம் -வரையறு**
   ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உயர்வைக் குறிக்கும். இது GDP-யால் மதிப்பிடப்படுகிறது. அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியால் மட்டும் குறிப்பிடப்படுவதன்றி, அந்நாட்டு மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

9. **வேளாண்மை பொருளாதாரம் பற்றி அம்பேத்கார் பொருளாதார கருத்துக்களைக் கூறுக.**
   - 1918-ல் அம்பேத்கர் எழுதிய "இந்தியாவில் குறைந்த நிலவுடைமை மற்றும் தீர்வுகள்" என்ற கட்டுரையை வெளியிட்டார்
   - அதில் நில உடைமை ஒருங்கிணைப்பு மற்றும் நிலவுடமை விரிவாக்கம் இடையே உள்ள வேறுபாட்டினை கூறுகிறார்.

10. **கிராமசர்வோதயம் -சிறுகுறிப்பு வரைக.**
    - உண்மையான இந்திய வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை -கிராமங்களில்தான் என்று சொன்னார் காந்தியடிகள்.
    - கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.

11. **இந்தியத் திட்டமிடுதலில் நேருவின் அணுகுமுறையை எழுதுக.**
    - திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்தியவர் நேரு ஆவார்.
    - ஒருநாட்டின் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைத் திட்டம் அவசியம் என்று நேரு கருதினார்.
    - திட்டமிடுதல் மூலம் ஒருநாடு தன்னைத்தானே வளர்ச்சியடைய செய்து தற்சார்பினை அடைகிறது.

12. **பெருக்கி கருத்தைப் பற்றி V.K.R.V.ராவ் பங்களிப்பு எழுதுக**
    முன்னேற்றம் அடையாத நாடுகளின் முதலீடு, வருமானம் மற்றும் பெருக்கி ஆகியவற்றிற்று இடையேயான தொடர்பு (1952) என்ற ராவ் அவர்களின் புத்தகம் பேரியியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு வழங்கியது.

13. **நலப்பொருளாதாரம் பற்றி அமர்த்தியாசென்னின் கருத்துக்களை எழுதுக.**
- அம்த்தியா சென் ஏழைகளைக் குறித்து அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்.
- ஏழைகளுக்கு அதிகாரம், கல்வி உடல்நலம், ஊட்டச்சத்து பாலின சமநிலை, துன்பம் நேரும் காலங்களில் பாதுகாப்பு ஆகியவை வழங்கப்பட வேண்டும் என்று கருதினார்.
-



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**14. சமூகக் கட்டமைப்புகளை விளக்குக.**

- மனித வளங்களை மேம்படுத்துவதும், பொருளாதார வளர்ச்சிக்க மறைமுகமாகத் துணை செய்வதுமான அமைப்புகளை சமூகக் கட்டமைப்புகள் என்கிறோம்.
- எ.கா. பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் இதர குடிமை வசதிகள்.
- இந்த சமூக அமைப்புகளின் மேம்பாடு மனித வளங்களின் திறமையையும், உற்பத்தி திறனையும் அதிகரிக்கின்றன.

**5 Marks**

1. இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.

**1.இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்:**
இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரத்திற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். தனியார் துறையும அரசுத் துறையும் இணைந்து செயல்படுவதாகும்.

**2. வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது:**
இந்தியாவில் 60% மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

**3. வளர்ந்து வரும் சந்தை:**
முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையே இந்தியாவின் சந்தை பிற நாடுகளுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது.

**4. வளர்ந்து வரும் பொருளாதாரம்:**
விரைவான பொருளாதார வளர்ச்சியின் விளைவாக இந்தியப் பொருளாதாரம் G20 நாடுகளில் இடம் பெற்றுள்ளது.

**5.வேகமாக வளரும் பணிகள் துறை:**
இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்கு பணிகள் துறையின் பங்களிப்பாகும்.

2. **இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி.**

**1.இரும்புத்தாது.** இந்தியாவில் உயர்தராமான ஹேமடைட், மற்றும் மேக்னடைட், இரும்புத்தாது, அபரிமிதமாகக் காணப்படுகிறது.

**2.நிலக்கரி** மற்றும் பழுப்பு நிலக்கரி. சீனா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அடுத்தபடியாக நிலக்கரி உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது.

**3.அலுமினியத்தாது** (பாக்சைட்) பாச்சைட் அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் முக்கியமானது ஆகும். ஒடிசா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் அதிக அளவு பாக்சைட் தாது செறிந்து காணப்படுகிறது.

4.**சுத்திரிக்கப்படாத எண்ணெய்.** இந்தியாவில் அஸ்ஸாம் மற்றும் குஜராத்தின் பல இடங்களில் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் எடுக்கப்படுகிறது.

**5.தங்கம்:** இந்தியா குறைந்த அளவே தங்க வளம் இருப்பு பெற்று விளங்குகிறது. மூன்று முக்கிய தங்கச் சுரங்கப் பகுதிகள் உள்ளன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## அத்தியாயம் -08
## இந்தியப் பொருளாதாரம் விடுதலைக்கு முன்னரும் - பின்னரும்

**35. பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி?**

**பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில்களின் பங்கு:-**

I. சிறுதொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு
II. சிறுதொழில் தரும் சமமான மண்டல வளர்ச்சி
III. உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது
IV. மூலதன பயன்பாடு முழுமைபெற சிறுதொழில் வழி வகுக்கிறது.
V. சிறுதொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது
VI. பெரிய அளவிலான தொழில்களுக்கு சிறுதொழில் நிறுவனங்களின் பங்கு
VII. சிறுதொழில் நிறுவனங்கள் நுகர்வோர் தேவைகளை நிறை வேற்றுகின்றன.
VIII. சிறுதொழில் நிறுவனங்கள் தொழில் முனைவோர்களை உருவாக்குகின்றன.

**36. வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்கள் விவரி?**

i. தேசியமயமாக்கலின் முதன்மையான நோக்கம் சமூக நலத்தை அடைவதேயாகும்.
ii. சமூகத்தில் தேவையான பகுதிகளுக்கு எளிதாக கடன் அளிப்பதற்கும் பேருதவியாக இருந்தன.
iii. கிராமப்புற மக்களிடையே வங்கி செயல்பாடுகளை ஊக்குவித்தல் மிகுந்த அவசியமாயிருந்தது.
iv. வட்டாரங்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகளை குறைக்க உதவுகின்றன.
v. வேளாண்துறை மற்றும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்கு தேவையான கடன்களை வங்கிகள் கொடுக்க ஆரம்பித்தன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## அத்தியாயம் - 10
## ஊரக பொருளாதாரம்

<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:</u>

1) **எது ஊரக பகுதியின் அடிப்படை அலகாகக் கருதப்படுவது ________**
அ) பஞ்சாயத்து
ஆ) வருவாய் கிராமம்
இ) நகரம்
ஈ) நகராட்சி

2) **எது ஊரக பகுதியை கண்டறியும் பண்பு ________**
அ) குறைந்த மக்கள் தொகைஅடர்த்தி
ஆ) அதிக மக்கள் தொகைஅடர்த்தி
இ) குறைந்த இயற்கைவளம்
ஈ) குறைந்த மனிதவளம்

3) **ஊரக பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு**
அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல்
ஆ) அதிக மக்கள் தொகைஅடர்த்தி
இ) குறைந்த அளவு மக்கள் தொகை
ஈ) ஏற்றதாழ்வு குறைவு

4) **2011 கணக்கெடுப்பின் மொத்த மக்கள் தொகையில் ஊரகத்தில் வாழும் மக்கள் தொகை சதவீதம் என்ன?**
அ) 40 ஆ) 50 இ) 60 ஈ) 70

5) **தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை**
அ) வேலையின்மை
ஆ) மறைமுக வேலையின்மை
இ) முழுவேலை
ஈ) சுயவெலை

6) **இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்பு படுத்தி குறிப்பது**
அ) நுட்பம்
ஆ) சார்ந்திருப்பு
இ) இரட்டைதன்மை
ஈ) சமமின்மை

7) **ஊரகப்பகுதி, ஊரக மக்கள் மற்றும உரக வாழ்க்கையை மேம்படுத்துதல் என்பது**
அ) ஊரக பொருளாதாரம்
ஆ) ஊரக பொருளியல்
இ) ஊரக வேலைவாய்ப்பு
ஈ) ஊரக மேம்பாடு

8) **ஊரகப் பொருளாதாரத்தில் வேளாண்மை பிரச்சனைக்குத் தொடர்புடையதாக கருதப்படுவது**
அ) மோசமான தகவல் தொடர்பு
ஆ) சிறிய அளவு நில உடைமை
இ) ஊரக ஏழ்மை
ஈ) மோசமான வங்கி செயல்பாடுகள்

9) **ஊரக பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக்கொள்ள வேண்டிய கலோரி அளவு**
அ) 2100
ஆ) 2200
இ) 2300
ஈ) 2400

10) **ஊரக ஏழ்மைக்கான காரணத்தை சுட்டுக**
அ) வேளாண்மை சாரா வேலையின்மை
ஆ) அதிக வேலைநிலை
இ) குறைந்த பணவீக்க வீதம்
ஈ) அதிக முதலீடு

11) **மறைந திருக்கும் வேலையின்மைக்கு மற்றொரு பெயர் என்ன?**
அ) திறந்த
ஆ) மறைமுக
இ) பருவ கால
ஈ) ஊரக

12) **குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலைவாய்ப்புப் பெறுவதை எப்படிக் கருதுவது?**
அ) திறந்த வேலைவாய்ப்பு
ஆ) மறைமுக வேலைவாய்ப்பு
இ) பருவகால வேலைவாய்ப்பு
ஈ) ஊரக வேலைவாய்ப்பு

13) **ஊரக தொழிற்சாலைக்கான உதாரணம்**
அ) சர்க்கரை ஆலைத்தொழில்
ஆ) பாய் தயாரிக்கும் தொழில்
இ) சிமெண்ட் தொழில்
ஈ) காகிதத் தொழில்

14) **இந்தியாவில் உள்ள ஊரக குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு?**
அ) பாதியளவு
ஆ) நான்கில் ஒரு பங்கு
இ) மூன்றில் இரண்டு பங்கு
ஈ) நான்கில் மூன்று பங்கு

15) **இந்தியாவில் ஊரக கடனுக்கு காரணமாக கருதப்படுவது**
அ) ஏழ்மை
ஆ) அதிக மக்கள் தொகை
இ) அதிக உற்பத்தி
ஈ) முழுவேலைநிலை

16) **எந்தவருடம் வட்டார ஊரக வங்கி பயன்பாட்டிற்கு வந்தது?**
அ) 1965
ஆ) 1970
இ) 1975
ஈ) 1980

17) **MUDRA வங்கி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக.**
அ) 2000
ஆ) 2005
இ) 2010
ஈ) 2015

18) **தேசிய ஊரக சுகாதாரப்பணி** அமுல்படுத்தப்பட்ட **ஆண்டை** குறிப்பிடுக.
அ) 2000
ஆ) 2005
இ) 2010
ஈ) 2015

19) **ஊரகச் சாலையின் பயன்பாடாக கருதப்படுவது.**
அ) ஊரக அங்காடி வசதி
ஆ) வேலைவாய்ப்பு
இ) ஊரக வளர்ச்சி
ஈ) மேற்கண்ட அனைத்தும்

20) **"இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்" இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?**
அ) ஆடம் ஸ்மித்
ஆ) காந்தி
இ) அமர்தியாசென்
ஈ) சர் மால்கம் டார்லிங்

**விடைகள்:**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | அ | அ | இ | ஆ | இ | ஈ | ஆ | ஈ | அ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| ஆ | இ | ஆ | ஈ | அ | இ | ஈ | ஆ | ஈ | ஈ |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## மதுரை மாவட்டம்

2 Marks

1. **ஊரக பொருளாதாரம் வரையறு.**
பொருளாதார கொள்கைகளை பயன்படுத்தி, ஊரகபகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதைக் குறிக்கிறது.

2. **ஊரகவளர்ச்சி என்றால் என்ன?**
ஊரக வளர்ச்சி என்பது ஊரகபகுதிகள், ஊரகமக்கள், ஊரக வாழ்க்கை ஆகியவற்றை மேம்படுத்தும் முறையாகும்.

3. **ஊரகஏழ்மை - வரையறு.**
கிராமங்களில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையை ஊரக வறுமை எனலாம்.

4. **திறந்தநிலை வேலையின்மை என்றால் என்ன?**
வேலைக்குத் தயாராக இருந்தும் எந்த வேலையும் கிடைக்காமல் வேலையில்லாத நிலையில் இருப்பது ஆகும்.

5. **மறைமுக வேலையின்மை என்றால் என்ன?**
ஒரு பணியில் தேவைக்கு அதிகமானவர்களைக் குறிக்கும். கூடுதல் பணியாளர்களின் இறுதிநிலை உற்பத்தி பூஜ்யமாக இருக்கும்.

6. **குடிசை தொழில் வரையறு.**
பொதுவாக குடிசைத் தொழில்கள் விவசாயத்தையே சார்ந்துள்ளன. இதன் மூலம் ஊரகமக்கள் முழுநேர மற்றும் பகுதி நேர வேலை வாய்ப்பினை பெறுகிறார்கள்.

7. **குறுங் கடன் என்றால் என்ன?**
குறுநிதி என்பது குறுகடன்களைக் குறிக்கும். சிறுதொழில் புரிவோருக்கு தேவையான நிதியை வழங்கி அவர்களை வணிகத்தில் முதலீடு செய்யவைப்பதே ஆகும்.

8. **ஊரக வீட்டுவசதி பிரச்சனைக்கான காரணங்களில் ஏதேனும் இரண்டு கூறு.**
1. குடிநீர்வசதி இன்மை 2. நல்ல சுகாதாரவசதி இன்மை

9. **ஊரக மின்மயமாக்கல் - வரையறு.**
ஊரக மின்மயமாக்குதல் என்பது ஊரக பகுதிகளுக்கு மின்வசதியை ஏற்படுத்தித் தருவதாகும்.

10. **இந்தியாவில் ஊரகமின்மயமாக்கலின் இரண்டு பாத காரணிகளை கூறுக.**
1. நிதிப்பற்றாக்குறை 2. மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்பு 3. மின்திருட்டு

3 Marks

1. **ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவம் கூறுக?**
   - ஊரக பகுதியின் முன்னேற்றம் இன்றி நாட்டின் முன்னேற்றம் அமையாது.
   - கிராமங்களை முன்னேற்றுவதன் மூலம், வேலைவாய்ப்பை தேடி நகர்புற பகுதிகளுக்கு இடம்பெயர்வதை தடுக்கலாம்
   - ஊரக மேம்பாட்டின் மூலம் இலாபகரமான வேலை வாய்ப்புகளையும், உணவு உற்பத்தியையும் பெருக்க இயலும்.

2. **ஊரக வளர்ச்சியின்மை காரணங்களை விளக்குக.**
   - மக்கள் தொடர்புடைய பிரச்சினை: எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்ப அறிவின்மை, நம்பிக்கைகுறைவு.
   - வேளாண்மை சார்ந்த பிரச்சனைகள்: உள்ளீடுகள் கிடைக்கப் பெறாமை, அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு.
   - பொருளாதாரம் சார்ந்த பிரச்சனைகள்: அதிகச்செலவு பிடிக்கும் தொழில் நுட்பங்கள்.

3. **ஊரக வறுமையை நீக்குவதற்கான வழி முறைகளை கூறுக.**
   - வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் காலத்திற்கு ஏற்ப நடை முறைப்படுத்தல்.
   - வேலை வாய்ப்புகளை வழங்குதல்.

4. **ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.**
   - ஊரக வேலைத்திட்டம் (ஊரக சாலை சீரமைப்பு, கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகள்)
   - ஊரக தொழில்மயமாக்கல் (ஊரக பகுதியில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி வேலைவாய்ப்பு வழங்குதல்)
   - தொழில்நுட்ப கல்வி (வேலைவாய்ப்பு சார்ந்த தொழிற்கல்வி வழங்குதல்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. மண்டல ஊரக வங்கி பற்றி குறிப்பு வரைக.**

- 1975-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- தற்போது 64-வங்கிகள் உள்ளன.
- நலிவடைந்தோருக்கு மட்டும் கடன் வழங்குகிறது.

**6. SHG யின் பண்புகளைக் கூறுக. அல்லது சுய உதவிக் குழுக்களின் முக்கிய இயல்புகள் யாவை?**

1. சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள்.
2. பெரும்பாலான சுய உதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை.
3. சுய உதவிக் குழுக்கள் தமக்கென்று வடிவமைக்கப்பட்டச் சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன.

**7. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.**

- குறுங்கடன் வாங்குபவரையும், பெறுபவரையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் குறுங்கடன் வழங்குவதில் நிலைத்தன்மையை ஏற்படுத்தல்.
- கடன் வழங்கும் சிறு நிதி நிறுவனங்களுக்கு, மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல்.
- அனைத்து சிறு நிதி வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்தல்
- வழங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் வழங்குவதற்காக கடன் உத்திரவாத திட்டம்.

## 5 Marks

**1. ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை: விவாதி.**

- **வேளாண்மையை சார்ந்திருத்தல்:**
  ஊரக பொருளாதாரம் இயற்கையையும், வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது.
- **ஊரக மக்களின் வாழ்க்கைமுறை:**
  பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மைநிலையிலும், பரிதாபகரமாகவும் உள்ளது.
- **மக்கள் தொகை அடர்த்தி:**
  மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவிக் காணப்படுகின்றன.
- **வேலைவாய்ப்பு:**
  பருவகால வேலையின்மை மற்றும் குறைவேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன.
- **வறுமை:**
  2011 - 12 ன் மதிப்பீட்டின் படி ஊரகப்பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழும் வசிக்கின்றனர்.

**2. ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க.**

- **மக்கள் தொடர்புடைய பிரச்சினை**
  எழுத்தறிவின்மை, தொழில்நுட்ப அறிவின்மை
- **வேளாண்மை சார்ந்த பிரச்சினைகள்**
  உள்ளீடுகள் கிடைக்கப்பெறாமை, அங்காடி வசதிகள் இன்மை
- **உள்கட்டமைப்பு சார்ந்த பிரச்சினைகள்**
  குடிநீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் போன்ற வசதியின்மை
- **பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்**
  கடன்சுமை, நலிவடைந்த தொழில்கள், சொத்துகளில் ஏற்றத்தாழ்வு
- **நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகள்**
  அரசியல் தலையீடு, குறைந்த கூலி
- **சமூகம் சார்ந்த பிரச்சினைகள்**
  சாதிய பாகுபாடு

**3. ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.**

- **விவசாயிகளின் ஏழ்மை நிலை**
  நுகர்வு மற்றும் விவசாயத் தேவைகளுக்காக அதிக வட்டியில் கடன்பெறுவதால் ஏழ்மை நிலையில் உள்ளனர்.
- **பருவமழை பொய்த்தல்**
  இயற்கை பொய்த்துப் போவதால் மேலும் கடன் சுமைக்கு ஆளாகின்றனர்.
- **வழக்குகள்**
  கல்வியறிவின்மையால் தேவையற்ற வழக்குகள் நீண்டகாலம் இழுத்தடிக்கின்றனர்.
- **அதிக வட்டிவீதம்**
  அதிக வட்டிவீதத்தில் கடன் பெறுவதால் கடனில் மூழ்கிப் போகின்றனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## அத்தியாயம்-11
## தமிழ்நாட்டு பொருளாதாரம்

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:**

1) **சுகாதாரக் குறியீட்டில் தமிழ்நாடு எந்த மாநிலத்திற்கு மேலாக உள்ளது**
அ) கேரளா
ஆ) பஞ்சாப்
இ) குஜராத்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

2) **பாலின விகிதத்தில் தமிழ்நாட்டின் தரம்**
அ) முதல்
ஆ) இரண்டாவது
இ) மூன்றாவது
ஈ) நான்காவது

3) **தமிழ்நாடு எதில் வளமானது?**
அ) வன வளம்
ஆ) மனித வளம்
இ) கனிம வளம்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

4) **தமிழ்நாட்டில் நீர்பாசனத்தின் முக்கிய ஆதாரம்**
அ) அணைக்கட்டுகள்
ஆ) கால்வாய்கள்
இ) கிணறுகள்
ஈ) குளங்கள்

5) **பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம்**
அ) கோயம்புத்தூர்
ஆ) திருப்பூர்
இ) ஈரோடு
ஈ) கரூர்

6) **கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது?**
அ) தமிழ்நாட்டின் நுழைவாயில் - தூத்துக்குடி
ஆ) வீட்டு ஜவுளி தயாரிப்பு - ஈரோடு
இ) எ.்கு நகரம் - சேலம்
ஈ) பம்ப் நகரம் - கோயம்புத்தூர்

7) **கீழுள்ள நகரங்களில் எதில் சர்வதேச விமான நிலையம் இல்லை?**
அ) மதுரை
ஆ) திருச்சி
இ) தூத்துக்குடி
ஈ) கோயம்புத்தூர்

8) **பயிர் உற்பத்தியில் எந்தப் பயிரைத் தவிர தமிழ்நாடு முன்னணியில் உள்ளது?**
அ) வாழைப்பழம்
ஆ) தேங்காய்
இ) தோட்டப் பயிர்கள்
ஈ) ஏலக்காய்

9) **எந்தபயிர் உற்பத்திக்காக அதிகப் பரப்பு நிலம் பயன்படுத்தப்படுகிறது?**
அ) நெல்
ஆ) கரும்பு
இ) நிலக்கடலை
ஈ) தேங்காய்

10) **எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்**
அ) இரண்டு
ஆ) நான்கு
இ) ஆறு
ஈ) எட்டு

11) **குறு சிறு நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம்**
அ) I ஆ) II
இ) III ஈ) IV

12) **தமிழ்நாட்டின் எம்மாவட்டத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது?**
அ) நாகபட்டினம்
ஆ) நீலகிரி
இ) திருச்சி
ஈ) தஞ்சாவூர்

13) **எம்மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் குறைவாகவுள்ளது?**
அ) மதுரை
ஆ) தேனி
இ) அரியலூர்
ஈ) கடலூர்

14) **எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாகவுள்ளது?**
அ) சண்டிகர்
ஆ) பாண்டிச்சேரி
இ) இலட்சத்தீவு
ஈ) அந்தமான் நிக்கோபர் தீவுகள்

15) **தமிழ்நாடு உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது?**
அ) வேளாண்மை
ஆ) தொழில் துறை
இ) சுரங்கம்
ஈ) பணிகள்

16) **மனித வளர்ச்சிக்குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம்**
அ) 2
ஆ) 4
இ) 6
ஈ) 7

17) **SPIC அமைந்துள்ள இடம்**
அ) சென்னை
ஆ) மதுரை
இ) தூத்துக்குடி
ஈ) புதுக்கோட்டை

18) **TICEL ன் பகுதி**
அ) இரப்பர் பூங்கா
ஆ) ஜவுளி பூங்கா
இ) உணவு பூங்கா
ஈ) உயிரி பூங்கா

19) **சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் எந்த நிலையில் உள்ளது?**
அ) மூன்றாம்
ஆ) நான்காம்
இ) முதல்
ஈ) இரண்டாம்

20) **தென்னக இரயில்வேயின் தலைமையிடம்**
அ) திருச்சி
ஆ) சென்னை
இ) மதுரை
ஈ) கோயம்புத்தூர்

**விடைகள்:**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | இ | ஆ | இ | ஆ | ஆ | இ | ஈ | அ | ஈ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| அ | ஆ | இ | ஆ | ஈ | ஈ | இ | ஈ | அ | ஆ |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2 Marks

1. **சாதமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்களைக் கூறுக. விகிதங்களையும் குறிப்பிடுக.**
   1.நீலகிரி (1041) 2. கன்னியாகுமரி (1031)

2. **மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வரையறு**
   மாநிலத்தில் ஓராண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்.

3. **தமிழ்நாட்டுக் கேற்ற நான்கு உணவுப் பயிர்களைக்குறிப்பிடுக.**
   1.நெல், 2. கம்பு 3. சோளம் 4. நிலக்கடலை

4. **தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை?**
   1. சென்னை, 2. தூத்துக்குடி

5. **பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?**
   பாரம்பரிய மற்றும் தொண்மை வாய்ந்த சிறப்பு மிக்க பகுதிகளுக்கு மேற்கொள்ளும் பயணம்.

6. **தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?**
   1.கல்பாக்கம் 2. கூடங்குளம்

7. **குறு நிறுவனங்கள் வரையறு.**
   25 இலட்சத்திற்கு மிகாமல் மூலதன முதலீடு கொண்ட நிறுவனங்கள் குறு நிறுவனங்கள் ஆகும்.

**3 Marks**

1. **தமிழ்நாட்டின் கனிம வளங்கள் -குறிப்பு வரைக.**
   1.டைட்டானியம், லிக்னைட், கிரானைட், பாக்சைட், கிராபைட், லைம்ஸ்டோன் போன்ற சுரங்கத் திட்டங்கள் தமிழகத்தில் உள்ளன.
   2. இவற்றில் முன்னோடித் திட்டாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தை குறிப்பிடலாம். (NLC)
   3. இதன் வளர்ச்சியினால் அனல் மின்நிலையம், உரத் தொழிற்சாலை, கார்பன் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருகின்றன.

2. **தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை விளக்குக.**
   1. மாநிலத்தின், ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பாகும்.
   2. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2016-17 நிதியாண்டில் 208 பில்லியன் டாலராக உள்ளது

3. **தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.**
   1. தமிழ்நாடு இந்தியாவின் மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி மையமாகும். மேலும் இந்தியாவின் நூல் கிண்ணம் என அழைக்கப்படுகிறது.
   2. மொத்த ஏற்றுமதி வருவாயில் 35 % ஜவுளித் துறையிலிருந்து கிடைக்கிறது.

4. **தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் ஏதேனும் இரண்டு உணவுப் பயிர்களின் உற்பத்தித் திறன்களை ஒப்பிடுக.**
   - மக்காச்சோளம், கம்பு, நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவற்றில் உற்பத்தியில் முதலிடத்திலும்
   - நெல், தேங்காய் ஆகியவற்றில் இரண்டாவது இடத்திலும்,
   - கரும்பு, சூரியகாந்தி, சோளம் ஆகியவற்றில் மூன்றாவது இடத்திலும் மிளர்கிறது.

5. **சுற்றுலாத் துறை மேம்பாட்டிற்கான செயல்பாடுகளை விவரி.**
   1.தமிழ்நாடு ஒரு சிறந்த சுற்றுலா மையமாகத் திகழ்ந்து வருகிறது.
   2.தமிழ்நாடு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் புகலிடமாக விளங்குகிறது.
   3.தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத்துறை தமிழ்நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்துகிறது.

6. **தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?**
   1.புனல் மின்சாரம் 2. சூரிய சக்தி மின்சாரம் 3. காற்றாலை மின்சாரம்

7. **சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் செயல் திறனை விளக்குக.**
   1. தமிழ்நாட்டின் சுகாதாரக் குறியீடானது மூன்றாவது இடத்தில் உள்ளது.
   2. தமிழகத்தில் பச்சிளங் குழந்தை இறப்பு வீதம் 17 ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5 Marks**

1. **மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.**
   - 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.21 கோடி.
   - இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12-வது இடத்தில் உள்ளது.
   - நகரமயமாதலின் சராசரி அளவு தமிழகத்தில் சுமார் 50% ஆக உள்ளது.
   - மொத்த மக்கள் தொகையில் 6-சதவீதத்தைக் கொண்டுள்ளது தமிழகம்.
   - இந்திய அளவில் நகர மக்கள் மொத்த மக்கள் தொகையில் சுமார் 10 சதவீதமாக உள்ளது.

2. **தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி.**
   - மின்னாற்றலை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பிற தென் மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது.
   - கல்பாக்கம், கூடங்குளம் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணுமின் நிலையங்களாகும்.
   - தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வெப்ப ஆற்றலில் அதிக அளவு அத்திப்பட்டு எண்ணூர், மேட்டூர், நெய்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது.
   - அனல்மின் உற்பத்தியில், தமிழ்நாடு தேசிய உற்பத்தியில் 34% க்கும் மேலாக உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது.
   - தமிழ்நாட்டில் 20-க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது.

3. **தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.**

**சாலை வசதி**

- தமிழ்நாடு மிகச் சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது.
- நாட்டிலுள்ள நகரங்கள் கிராமப்புறங்கள் மற்றும் வேளாண் அங்காடிப் பகுதிகளை இணைக்க கூடியத் தரமான சாலைப் போக்குவரத்தைக் கொண்டுள்ளது.
- மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளது.
- தங்க நாற்கரத் திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது.
- சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

**இரயில் போக்குவரத்து**


தமிழ்நாடு நன்கு மேம்படுத்தப்பட்ட இருப்புப்பாதை அமைப்பைக் கொண்டடுள்ளது. தென்னக இரயில்வே சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது.

**வான்வழிப் போக்குவரத்து**

தமிழ்நாட்டில் சென்னை, கோயம்பத்தூர், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.

**துறைமுகங்கள்**

சென்னை, எண்ணூர், மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகமாகும்.






Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com